வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 24.11.2022 வியாழக்கிழமை | இதழ் : 351 | பக்கங்கள் : 16




# வரவு - செலவு திட்டத்தின் பின்னர் இனப் பிரச்னை தீர்வுக்கான பேச்சு



## சகல கட்சிகளுக்கும் ஜனாதிபதி அழைப்பு

- *போராட்டம் வெடித்தால் படைகள் அடக்கும்!*
- *1984ஆம் ஆண்டு முதலே இனப் பிரச்னையாம்!*
- *பாராளுமன்றத்தை கலைக்க மாட்டேன்*
- *தேர்தல் முறை மாற்றமே முதலில் பிறகே தேர்தல்*

**கொழும்பு, நவம்பர் 24**

**வரவு - செலவு திட்டத்தின் பின்னர் - டிசெம்பர் 11ஆம் திகதியின் பின்னர் இனப் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கான பேச்சுக்கள் நடத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். இந்தப் பேச்சில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளையும் பங்கேற்குமாறும் அவர் அழைத்துள்ளார்.** 15

## 13 பிளஸ்க்கு உடன்படுகிறேன் - மகிந்த 13ஐ நான் பாதுகாப்பேன் - ஜனாதிபதி!

### லக்ஷ்மன் கிரியெல்லவால் சபையில் நேற்று ஆரோக்கியமான விவாதம்!

*கொழும்பு, நவ. 24*

*13 பிளஸ் அதிகாரப் பகிர்வுக்கு இப்போதும் தயாராக இருப்பதாக நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ.*

*இதேசமயம், 13ஆவது திருத்தச் சட்டத்தை பாதுகாப்பேன் என்று உறுதியளித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.*

*இந்த இரு ஆரோக்கியமான பதில்களும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல எழுப்பிய கேள்விகளையடுத்து சபையில் ஏற்பட்டது.*

*நேற்றைய தினம் பாராளுமன்றில் இனப்* 15

## பாகிஸ்தானின் தூதுவரும் பருத்தித்துறை முனையில்!



*வடமராட்சி, நவ. 24*

*இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் நேற்று புதன்கிழமை பருத்தித்துறை முனைக்கு வருகை தந்தார்.*

*தனது சகாக் கள் சகிதம் பருத்தித்துறை முனைக்கு வந்த பாகிஸ்தான்* 15

## மாகாண தேர்தல் நடக்காததற்கு த. தே. கூட்டமைப்பே காரணம்!

### வெளிவிவகார அமைச்சர்

*புதுடில்லி, நவ. 24*

*மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்த முடியாமல் போனமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் கட்சிகளுமே காரணம் என்று கூறியிருக்கிறார் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி.*

*இந்தியாவின் வியோன் ஊடகத்துக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.*

*13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கான எந்தவொரு திட்டமும் இல்லை என்றும் தமிழ் சிறுபான்மையினரின் நிலைமை குறித்தும் இந்தியா ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் கவலை தெரிவித்து தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.*

*இதற்கு பதிலளித்த வெளிவிவகார அமைச்சர்,*

*“உண்மையில் நாம் அனைவரும் மாகாண சபை தேர்தலை விரும்புகிறோம். தேர்தல் நடத்தப்படாதமைக்கு 2018ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கத்தால் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட ஒரு குறிப்பிட்ட சட்டமூலம் காரணமாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் கட்சிகளும் குறிப்பிட்ட சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்* 15

## கூட்டமைப்பின் அரசமைப்பு பிரதிநிதியாக சித்தார்த்தன்!

*கொழும்பு, நவ. 24*

*அரசமைப்பு பேரவைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதியாக பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.*


*இந்த நியமனத்துக்கான தீர்மானத்தை தமிழ்த் தேசியக் கூட்ட* 15

## பொலிஸ் சட்டத்தை மாற்ற ஒப்புதல்!

*கொழும்பு, நவ. 24*

*தற்போது நடைமுறையில் உள்ள பொலிஸ் கட்டளைச் சட்டத்தை துஷ்பிரயோகம் செய்வதாகக் கண்டறியப்பட்ட நிலையில் அதற்குப் பதிலாக புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்த அரசு* 15

## பிணையில் வந்த சிறீ தம்ம தேரர் வேறொரு வழக்கில் கைதானார்!



*கொழும்பு, நவ. 24*

*பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைதாகி நேற்று பிணையில் விடுவிக்கப்பட்ட கல்வெவ சிறீ தம்ம தேரர் வேறொரு வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளார்.*

*அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை ஏற்பாடு செய்தார் என்ற குற்றச்சாட்டில் சிறீ தம்ம தேரரும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் சம்மேளன ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகேயும் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ்* 15

## இப்படியும் நடக்கிறது...!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கின் தெரிவு என்றே பலரும் கருதுவதுண்டு. அவர் எப்போதும் மேற்குக்கு ஆதரவான ஆள் என்பது பலரின் கணிப்பு.

மேற்கு என்றால் நமக்கு நினைவுக்கு வருவது அமெரிக்காதான். மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்தபோது அவரை ஆட்சியிலிருந்து வீழ்த்துவதற்காக மைத்திரியை வேட்பாளராக்கி வெற்றி பெறவைத்ததில் அல்லது மகிந்தவை தோற்கடித்ததில் மேற்கின் பலம் பிரயோகிக்கப்பட்டதும் மேற்கோடு இந்தியாவும் கைகோர்த்திருந்ததும் இரகசியமானதல்ல. தான் தோற்றுப்போனதற்கு இந்திய உளவுத்துறைதான் காரணம் என்று மகிந்தர் பகிரங்கமாகவே குற்றம்சாட்டியதும் நாம் கண்டதுதான்.

மேற்கும் இந்தியாவும் ஓரணியில் நின்றது காரணம் வேறொன்றுமல்ல. சீனாவின் ஆதிக்கத்தை வீழ்த்துவதற்காகத்தான்.

கோட்டாபய பதவியிலிருந்து விலகுவதென்று முடிவெடுத்ததும் அவரோடு அப்போது தொடர்பிலிருந்த இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், அவர் பதவி விலகுவதற்கு முன்னதாக அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவை பதவியிலிருந்து நீக்கிவிட்டு அவரை பதவி விலகுமாறு கேட்டிருந்தது பற்றி நேற்றைய இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

கோட்டா ஜனாதிபதி பதவியில் இருக்கும்போதே ரணிலை பிரதமர் பதவியில் இருந்து நீக்கியிருந்தாலும் பின்னர் ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்காக பாராளுமன்றத்தில் நடந்த தேர்தலில் மகிந்த தரப்பு தமது வேட்பாளராக ரணிலையே தெரிவுசெய்திருக்கும் என்பதும் அவரே வெற்றியும் பெற்றிருப்பார் என்பதும் தெரிந்ததுதான்.

அப்படியிருக்கையில் எதற்காக இந்தியா அவரை பதவியிலிருந்து நீக்கிவிட்டு கோட்டாவை பதவி விலகச் சொன்னது என்பது புரியவில்லை.

இப்போது அதுவல்ல, நாம் சொல்ல வருவது. ரணில் ஆட்சியில் இருப்பதை இந்தியா விரும்பவில்லை என்பது தெளிவாக தெரிய வந்திருக்கின்றது. அதனால்தான் பாராளுமன்றத்தில் நடந்த தேர்தலில் ரணிலுக்கு எதிராக களம் இறங்கியிருந்த டலஸ் அழகப்பெருமவுக்கு வாக்களிக்குமாறு கூட்டமைப்பிடம் கேட்டதாகவும் அப்போது கூறப்பட்டது.

ரணில் ஆட்சியில் இருப்பதை இந்தியா விரும்பாததால்தான் இன்றுவரை அவர் புதுடில்லி செல்வதற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அழைப்பு விடுக்கப்படவில்லை என்பதைவிட, அவரின் கோரிக்கையை உதாசீனம் செய்து வருகின்றது.

இந்தியாவின் நிலைதான் இது என்றால், மேற்கு- அதுதான் அமெரிக்காவின் நிலையும் கிட்டத்தட்ட அப்படித்தான் இருக்கின்றது.

ஒருவர் நாட்டின் அதிபராகவோ அல்லது பிரதமராகவோ பதவியேற்றதும் சம்பிரதாயபூர்வமாக அவரை வாழ்த்துவதை அமெரிக்கா வழமையாகக் கொண்டிருக்கின்றது.

ஆனால், ரணில் பதவியேற்ற பின்னர் அந்த வழக்கமான வாழ்த்துக்கூட அமெரிக்க தரப்பிலிருந்து வரவில்லை. அதைவிட முக்கியமானது, அமெரிக்காவின் தூதுவர் ஜூலி சங் அம்மையாருடன் ரணில் மோதல் போக்கை கொண்டிருப்பதும் ஒரு சந்தர்ப்பத்தில் நேடியாகவே அவருடன் முரண்பட்டுக் கொண்டதையும் செய்திகளில் பார்த்தோம்.

அமெரிக்காவில் நடைபெற்ற இடைக்கால தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனநாயகக் கட்சி தோல்வி அடையும் என்றும் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் குடியரசுக் கட்சியே அந்தத் தேர்தலில் வெற்றிபெறும் என்றும் ஜனாதிபதி ரணிலின் ஆலோசகர்கள் அவருக்கு தெரிவித்திருந்தனர் எனவும் கூறப்பட்டது.

குடியரசுக் கட்சி செனட் சபையிலும் பாராளுமன்றத்திலும் ஆட்சியைக் கைப்பற்றினால் தனக்கான அங்கீகாரத்தை பெறுவது சுலபமானது என்ற எண்ணத்தில் இருந்த ஜனாதிபதி தரப்புக்கு தேர்தல் முடிவுகள் ஏமாற்றமளித்துள்ளதாகவும் இதனால், அமெரிக்க தூதுவர் ஜூலி சங்குடன் மென்மையான அணுகுமுறையை கடைப்பிடிக்க ரணில் இப்போது ஆர்வம் காட்டிவருவதாகவும் அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்க இடைக்கால தேர்தலில் பைடனின் ஜனநாயகக் கட்சி வெற்றிபெற்ற பின்னர், இந்தோனேசியாவில் நடைபெற்ற ஜி- இருபது மாநாட்டில் கலந்துகொண்ட பைடன், சீன அதிபருடன் மிக நட்புரீதியாக பேச்சு நடத்தியிருப்பதும் ரணில் தரப்புக்கு நல்ல அறிகுறி அல்ல என்கின்றன அந்த வட்டாரங்கள்.

இந்த நிலையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தாலோ, மனித உரிமை மீறல்களை தொடர்ந்தாலோ வசந்த முதலிகே மற்றும் சிறிதம்ம தேரரை மேலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்தாலோ அனைத்துலக சமூகத்தின் தாக்கம் மேலும் அதிகரிக்கலாம் என்று இப்போது ரணில் தரப்புக்கு சொல்லப்பட்டிருக்கின்றதாம்.

இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு எப்படியாவது இந்தியாவின் ஆதரவை பெற்றுவிடவேண்டும் என்பதில் குறியாக இருக்கும் ஜனாதிபதி அதற்காக பகீரதப் பிரயத்தனம் செய்துவருகின்றார்.

இன்று இலங்கை ஆட்சியை இலங்கை மக்கள் தீர்மானிக்கவில்லை என்பதையே நடக்கும் சம்பவங்கள் புலப்படுத்துகின்றன.!

- ஊர்க்குருவி

# நாட்டையும் மக்களையும் நாசப்படுத்துகிறார் ரணில்!

## சஜித் அணி குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 24

ராஜபக்ஷர்களைப் போல் ரணில் விக்கிரமசிங்கவும் நாட்டையும், மக்களின் வாழ்வையும் நாசப்படுத்தி வருகின்றார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மொட்டுக் கட்சியைச் சேர்ந்தவர்களை அரசியலிலிருந்து ஓரங்கட்டவேண்டும் என்று மக்கள் நினைத்த போதிலும் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கிய அந்தத் தரப்பினர் தங்களது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொண்டனர்.

ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பொறுப்பை ஏற்றால், சர்வதேச ரீதியில் நட்புறவைப் பேணி, சர்வதேச அளவில் நிதி உதவிகளைப் பெற்று நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பார் என்று மக்கள் மத்தியில் நம்பிக்கை இருந்தது.

எனினும், நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கு டொலர் இருப்பை எவ்வாறு அதிகரித்துக் கொள்வது என்ற கேள்வியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எழுப்பியுள்ளார். இது உண்மையில் வெட்கப்படவேண்டிய விடயமாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் சொத்துக்களை விற்பனை செய்தே நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு முயற்சிக்கின்றார்.

ரணில் விக்கிரமசிங்க என்பவர் ஆரம்பத்திலிருந்தே நாட்டின் சொத்துக்களை விற்பனை செய்தே நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் நபர் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களிலும் நாட்டின் சொத்துக்களை உலக நாடுகளுக்கு விற்பனை செய்தார். விவசாய பொருளாதாரம் பலம் பெற்றதா? நாட்டு மக்களின் வயிறு நிரம்பியதா? நாட்டு மக்களின் சட்டைப் பைகளுக்கு பணம் சென்றதா?

நாட்டின் சொத்துக்களை விற்பனை செய்தமை ஊடாக கிடைக்கப் பெற்ற பணம் எங்கு சென்றது என்பதை மக்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்நிலையில் தற்போது நட்டம் என்ற போர்வையில் இலாபம் ஈட்டும் நிறுவனங்களையே விற்பனை செய்ய ரணில் விக்கிரமசிங்க முயல்கிறார் - என்றார். (அ)

## சந்நிதியான் ஆச்சிரமத்தால் உலருணவு பொதி அன்பளிப்பு



வடமராட்சி, நவ. 24

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் மன்னார் - மடு - பெரிய முறிப்பை சேர்ந்த 95 குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட - சிறுவர்களை அதிகமாகக் கொண்ட நாளாந்த கூலித் தொழிலை சீவனோபாயமாகக் கொண்ட குடும்பங்களுக்கு இந்த உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன. 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்த உதவித் திட்டத்தை சந்நிதியான் ஆச்சிரம மோகனதாஸ் சுவாமிகள் வழங்கி வைத்தார். இந்த நிகழ்வில், சமூக செயல்பாட்டாளர்களான இ. தயாபரன், அந்தோணி ஜேம்ஸ், விவசாய அமைப்பின் தலைவர் ச. சத்தியபாலன், மகளிர் அமைப்பைச் சேர்ந்த எஸ். மேரி மாக்றேற் மற்றும் ஆச்சிரம தொண்டர்களும் கலந்து கொண்டனர். (ஐ-02)

## சைவ சமய போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்!

வடமராட்சி, நவ. 24

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் 60ஆம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள், அறநெறிப் பாடசாலை மாணவர்கள் மற்றும் திறந்த மட்ட போட்டியாளர்கள் (18-30வயது) மத்தியில் 4 மாகாணங்களில் சைவ சமயம் சார்பாக போட்டிகளை நடத்தவுள்ளனர்.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் பண்ணிசை போட்டி, தொண்டு பாடும் செயன்முறைப் போட்டிகள், புராண படனப் போட்டி, கதாப்பிரசங்கப் போட்டி, மிருதங்கப் போட்டி மற்றும் வில்லுப்பாட்டு ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

திறந்த மட்ட போட்டிகளாக புராண படனம், கதாப்பிரசங்கம், மிருதங்கம், வில்லுப்பாட்டு மற்றும் மேடை நாடகப் போட்டிகளையும் நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்பாக தமது விண்ணப்பங்களை saivappulavarsangam 1960@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது சைவப்புலவர் சி. கா. கமலநாதன், தலைவர், அகில இலங்கை சைவப்புலவர் சங்கம், இல. 610 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-02)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022

"நாகரிகத்தின் வேர் காடுகள்தான். கூட்டங்களில் இருந்து விலகியிருந்து மரங்களுடன், ஆறுகளுடன், ஏரிகளுடன் ஒன்றாய்க் கலந்திருந்த மனிதர்களிடம் இருந்துதான் தலைசிறந்த கருத்துகள் வந்துள்ளன. காடுகளின் அமைதி மனிதனின் அறிவாற்றல் பெருக உதவியுள்ளது. "

இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)

ஈழநாடு
Eelanadu
24.11.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 08

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ரணிலின் எச்சரிக்கை?

இன்னோர் 'அறகலய' – அதாவது, தென்னிலங்கை மக்கள் கிளர்ச்சியை தான் அனுமதிக்கப் போவதில்லை என்றும் அவ்வாறானதொரு சூழ்நிலை ஏற்பட்டால் படையினரை கொண்டு அதனை கட்டுப்படுத்துவேன் எனவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். பொருளாதார நெருக்கடியின் விளைவாகவே தென்னிலங்கை மக்கள் வீதிக்கு வந்திருந்தனர். பொருளாதார நெருக்கடியை அதிகாரத்தில் இருக்கும் அரசாங்கத்தால் சமாளிக்க முடியாமல் போகின்றபோது மக்கள் வீதிக்கு வருவது இயல்பான ஒன்றாகும். கோட்டாபய ராஜபக்ஷவால் நிலைமைகளை சமாளிக்க முடியாமல் போனமையால் ரணில் விக்கிரமசிங்க மீளவும் அரசியல் அரங்குக்கு வரநேர்ந்தது. ரணில் ஆட்சியை பொறுப்பேற்றதைத் தொடர்ந்து உடனடியாகவே மக்கள் கிளர்ச்சியை முடிவுக்கு கொண்டுவருதற்கான முயற்சிகளையே மேற்கொண்டார். இதனை ஒரு வார்த்தையில் கூறுவதனால் நாட்டை அரசை நோக்கி திருப்பும் முயற்சிகளையே ரணில் முன்னெடுத்தார். அரசுக்கு திருப்புதல் என்றால் என்ன?

தென்னிலங்கையில் ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சி இயல்பானதாக இருந்தாலும்கூட அதனை தங்களுடைய நீண்டகால அரசியல் முன்னெடுப்புக்களுக்கான மூலதனமாக பயன்படுத்துவதற்கான முயற்சிகளும் இடம்பெற்றன. இதில், ஜே. வி. பியும் குமார் குணரட்ணம் தலைமையிலான முன்னிலை சோசலிஷ கட்சியும் பிரதான பங்குவகித்தன. இவ்வாறானதொரு பின்னணியிலேயே அலரி மாளிகை மற்றும் பிரதமர் செயலகம் கிளர்ச்சி குழுவினரால் முற்றுகையிடப்பட்டன. அலரி மாளிகை கிளர்ச்சிக்குழுக்களால் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து நாடு அரசின் கட்டுப்பாட்டில் இல்லையென்னும் நிலைமை உருவாகியது.

பொதுவாக ஒரு நாட்டில் கிளர்ச்சியாளர்கள் – அவர்கள் எவ்வாறான நோக்கங்களை கொண்டிருந்தாலும்கூட ஜனாதிபதியின் வாசஸ்தலத்தை கைப்பற்றினால், அது அரசின் வீழ்ச்சியின் அடையாளமாகவே நோக்கப்படும். இதன் தொடர்ச்சியாக பாராளுமன்றத்தையும் கைப்பற்றுவதற்கான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறானதொரு சூழலில்தான் ரணில் தனது அதிகாரத்தை முழு அளவில் பயன்படுத்தி நிலைமைகளைப் பழைய நிலைக்குக் கொண்டுவந்தார். அலரி மாளிகை, பிரமதர் செயலகம் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்குள் அத்துமீறி நுழைந்தவர்களெனப் பலர் தொடர்ச்சியாக கைது செய்யப்பட்டனர். அரசை கேள்விக்கு உள்ளாக்க முற்பட்டவர்கள் என்னும் அடிப்படையில்தான் இவ்வாறான கைதுகள் அனைத்தும் இடம்பெற்றன.

இதன் மூலம், ரணில் ஒரு தெளிவான செய்தியைக் கூறமுற்பட்டார். அதாவது, அரசை கேள்விக்கு உள்ளாக்க முற்படுபவர்கள் அனைவரும் கைது செய்யப்படுவர். அரசை பாதுகாத்தல் என்று வருகின்றபோது, அதில் தாராளவாத நபர், கடும்போக்கு நபர் என்னும் பேதங்கள் இருப்பதில்லை. இந்த அடிப்படையில்தான் தற்போது ரணில் தான் எந்த எல்லைக்கும் போவேன் என்று எச்சரித்திருக்கின்றார்.

'அறகலய'வால் நன்மையடைந்த ஒருவர் தொடர்பில் கூறுவதனால் அது ரணில் விக்கிரமசிங்க மட்டும்தான். ஆனால், அதே ரணில் விக்கிரமசிங்க இன்னோர் அறகலயவை கட்டுப்படுத்துவதற்கு படையினரை பயன்படுத்துவேன் என்று எச்சரிக்கின்றார். ரணிலின் எச்சரிக்கைக்குப் பின்னால் இரண்டு செய்திகள் உள்ளன. ஒன்று, நாட்டை முன்நோக்கி நகர்த்துவதற்கான முயற்சிகளை குழப்ப முற்படுவர்களை அனுமதிக்க முடியாது. இரண்டு, அரசாங்கத்தை வீழ்த்தும் நோக்கில் எவரேனும் செயல்ட்டால் அவர்கள் மீது இராணுவத்தைப் பிரயோகிப்போம். இவ்வாறானதோர் எச்சரிக்கையை வெளியிடுவதற்கு முன்னர் முப்படைகளின் தளபதிகளையும் ரணில் விக்கிரமசிங்க சந்தித்திருந்தார் என்பதையும் இந்த இடத்தில் குறித்துக்கொள்ள வேண்டும்.

# இலாபமீட்டும் அரச நிறுவனங்களை விற்பதற்கு அரசுக்கு ஆணை இல்லை!

### சஜித் பிரேமதாஸ சபையில் சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 24

இலாபமீட்டும் அரச நிறுவனங்களை விற்பனைச் செய்வதற்கு அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை இல்லை என்று பாராளுமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றில் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நட்டமடைந்து வரும் அரச நிறுவனங்களை விற்பனை செய்வது தொடர்பில் கலந்துரையாடமுடியும்.

எனினும் இலாபமீட்டும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், ரெலிகொம் ஆகிய நிறுவனங்களை விற்பனை செய்வதற்கு அரசாங்கத்துக்கு எந்த உரிமையும் இல்லை.

இது தொடர்பில் அரசாங்கம், பதில் வழங்க வேண்டும்.

இதேவேளை, எதிர்வரும் வருட ஆரம்பத்தில் உள்ளூராட்சி தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், அரசாங்கம் ஏன் இந்த முடிவை எடுத்தது என்பது கேள்வியாக உள்ளது.

இந்த முடிவைப் பார்க்கும்போது, தேர்தலை பிற்போடும் திட்டம் உள்ளதாகவே கருதவேண்டியுள்ளது- என்றார். (அ)

# ரணிலுடன் இன்று இ.தொ.கா பேச்சு

கொழும்பு, நவ. 24

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்றை இன்று வியாழக்கிழமை ஜனாதிபதியுடன் மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக இ.தொ.கா பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

மேற்படி கடந்துரையாடலில் அனைத்து மலையக அரசியல் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அதேவேளை, அகரப்பத்தன பெருந்தோட்ட நிறுவனத்துக்கு எதிராக நடத்தப்பட்டு வரும் தொழிற்சங்கப் போராட்டத்துக்கு சம்பந்தப்பட்ட கம்பெனி உரிய தீர்வை வழங்கத் தவறுமானால் நுவரெலியா மாவட்டத்திற்கும் அந்த போராட்டம் விரிவு படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# செங்குந்த இந்துவுக்கு அருகில் வீடொன்றை உடைத்து திருட்டு!

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ்ப்பாணம் செங்குந்த இந்துக் கல்லூரிக்கு அருகில் உள்ள வீடொன்றை உடைத்து உட்புகுந்த திருடர்கள் ஒரு பவுண் தங்க தோடுகள் இரண்டு, 30 அங்கர் பால்மா பெட்டிகள் மற்றும் ஒரு தொகை பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

குறித்த வீட்டில் வசிப்போர் வேலை நிமித்தம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வெளியே சென்ற சமயம் வீட்டு வளவினுள் அத்துமீறி நுழைந்த திருடர்கள் கதவை உடைத்து வீட்டினுள் புகுந்து திருட்டில் ஈடு பட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# பட்ஜெட்டுக்கு ஆதரவளித்த துமிந்த மீது நடவடிக்கை!

கொழும்பு, நவ. 24


வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்கவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வரவு - செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிக்க கட்சியின் மத்திய குழு எடுத்த தீர்மானம் தமக்கும் பொருத்தும் என்றும் தானும் மத்திய குழுவில் பங்குபற்றியதாகவும் முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே முன்னாள் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மீண்டும் கட்சியின் ஆட்சியை பிடிப்பாரா என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த மைத்திரிபால சிறிசேன, அது தொடர்பில் அச்சம் இல்லை. எவரும் கட்சியில் இணையலாம் - என்றார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






### மேடம்
நீங்கள் நினைத்தபடியே முயற்சியில் நன்மைகள் தோன்றும். மாலையில் சில சங்கடங்கள் தோன்றும். குடும்பத்தினர் தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள். எதிர்பார்த்த வரவு வந்து சேரும்.

### இடபம்
தம்பதி இடையே ஏற்பட்ட பிரச்னைகள் நீங்கும். முயற்சியில் வெற்றி காண்பீர்கள். தடைபட்டிருந்த வருவாய் வந்து சேரும். நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும். பண வரவால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

### மிதுனம்
புதிய முயற்சி ஒன்று நிறைவேறும். வருவாயைக் கொண்டு குடும்ப நிலையை சரி செய்யும் முயற்சிக்கு வருவீர்கள். அமைதியாக செயல்பட்டு நினைத்ததை சாதித்துக் கொள்வீர்கள். எதிர்பார்த்த வரவு உண்டு.

### கடகம்
புதிய திட்டங்கள் தீட்டி செயல்பட ஆரம்பிப்பீர்கள். திருப்புமுனையான நாள். எதிர்பார்த்த ஆதாயம் வந்து சேரும். பழைய கடன்களை அடைப்பீர்கள். புதிய தொழில் தொடங்கும் முயற்சி நிறைவேறும்.

### சிம்மம்
புதிய முயற்சிகள் வெற்றியாகும். தொழிலை விரிவு செய்வீர்கள். உங்கள் அணுகுமுறையால் வருமானம் அதிகரிக்கும். எதிர்காலம் பற்றிய எண்ணம் மேலோங்கும். புதிய முயற்சி ஒன்றில் ஈடுபடுவீர்கள்.

### கன்னி
குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் விலகும். பணியிடத்தில் மகிழ்ச்சியான நிலை உண்டாகும். பொருளாதார சிந்தனை மேலோங்கும். உங்கள் செயல் மற்றவர்களால் பாராட்டப்படும். புதிய சொத்து வாங்குவீர்கள்.

### துலாம்
நீண்ட நாள் பிரச்னை ஒன்று முடிவிற்கு வரும். வரவிற்கு வழி காண்பீர்கள். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். நீங்கள் விரும்பிய வகையில் செயல்பட்டு மகிழ்வீர்கள். வருவாயில் ஏற்பட்ட தடைகள் விலகும்.

### விருச்சிகம்
பிள்ளைகளின் திருமணத்திற்காக முயற்சிகள் மேற்கொள்வீர்கள். அலைச்சல் அதிகரிக்கும். குடும்ப வகையில் திடீர் செலவுகள் உண்டாகும். உங்கள் செயல்கள் ஆதாயம் தரும்.

### தனுசு
நீங்கள் எதிர்பார்த்த வருவாய் இன்று உங்களைத் தேடி வரும். மகிழ்ச்சி கூடும். உங்கள் முயற்சிகளில் இன்று விவேகம் இருக்கும். நினைத்ததை சாதிப்பீர்கள். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னைகள் முடிவிற்கு வரும்.

### மகரம்
வியாபாரத்தை விருத்தி செய்வதற்காக புதிய முயற்சியில் இறங்குவீர்கள். பழைய முதலீடுகளில் ஆதாய நிலை ஏற்படும். வருவாய் அதிகரிக்கும். நீண்ட நாளாக நினைத்திருந்த ஒரு வேலையை செய்து முடிப்பீர்கள்.

### கும்பம்
உங்கள் எண்ணங்களில் ஒன்று நிறைவேறும். நீங்கள் விரும்பியதை அடைந்து மகிழ்வீர்கள். வருமானம் பல வழிகளில் வந்து சேர்ந்தாலும் உங்கள் மனம் இன்று அமைதியை நாடும்.

### மீனம்
இன்று மாலை வரை சங்கடங்கள் இருக்கும். வெளியூர் பயணத்தில் எச்சரிக்கை அவசியம். வேலைப் பளுவின் காரணமாக உங்கள் உடலும் மனமும் சோர்வடையும். எச்சரிக்கை அவசியம்.

# நான்கு இலங்கையர்கள் விடுதலை; இலங்கை ஆவணம் அனுப்பவில்லை!

திருச்சி, நவ. 24

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் தண்டனை கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களை நாடு கடத்துவதற்கான இலங்கையின் ஆவணங்களுக்காகக் காத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது, சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனைக் கைதிகள் 4 பேரையும் நாடு கடத்துவது, இலங்கை அதிகாரிகளிடம் இருந்து பயண ஆவணங்கள் பெறுவதை பொறுத்தே அமையும் என்று திருச்சி மாவட்ட ஆட்சியர் எம். பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் ஆவணங்களை வழங்கியவுடன் அவர்கள் நாடு கடத்தப்படுவார்கள். அதுவரை அவர்கள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று பிரதீப் குமார் கூறியுள்ளார்.

2022, நவம்பர் 11 ஆம் திகதி இந்திய உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் பின்னர் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட ஆறு பேரில், இலங்கை பிரஜைகள் நான்கு பேரும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட உள்ளனர்.

1991ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் தண்டனை பெற்ற ஆறு பேரையும் விடுதலை செய்யுமாறு 2016 மார்ச்சில் தமிழக அரசு சர்ச்சைக்குரிய வகையில் பரிந்துரைத்ததையடுத்து, 2022 நவம்பர் 11ஆம் திகதியன்று அவர்களை விடுதலை செய்ய உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கில் தண்டனை பெற்ற ஏழு பேரில் முதல்வரான பேரறிவாளனை உடல் நிலை சீரின்மை மற்றும் நல்ல நடத்தை காரணமாக விடுதலை செய்து மே 18ஆம் திகதி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்தநிலையிலேயே சில மாதங்களில் ஆறு தண்டனைக் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நளினி ஸ்ரீஹரன், முருகன் என்கிற ஸ்ரீஹரன், சாந்தன், ரவிச்சந்திரன், ரொபர்ட் பயஸ் மற்றும் எஸ் ஜெயக்குமார் ஆகிய ஏழு குற்றவாளிகள் 1991இல் கைது செய்யப்பட்டனர். இவர்களில் நளினியின் கணவர் ஸ்ரீஹரன் உட்பட நான்கு பேர் இலங்கையர்களாவர். (ஐ)

# இலங்கைக்கு கடத்தப்பட்ட 300 கிலோ கஞ்சா கைப்பற்றல்!

சென்னை, நவ. 24

இலங்கைக்கு கடத்தப்பட்ட 300 கிலோ கஞ்சா, 500 கிராம் கஞ்சா எண்ணெய் என்பவற்றை இந்திய கடலோர காவல் படைகைப் பற்றியுள்ளது.

நேற்று முன்தினம், இராமநாதபுரம் - இராமேஸ்வரத்தில் இருந்து, கடல் வழியாக ஒரு கும்பல் இலங்கைக்கு போதைப் பொருள் கடத்துவதாகத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து, முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையில் 300 கிலோ கஞ்சாவும், 500 கிராம் கஞ்சா எண்ணெயும் கைப்பற்றப்பட்டன.

முதற்கட்ட விசாரணையில், புலிகள் அமைப்புக்கு நிதி திரட்டவே இந்தப் போதைப் பொருள் கடத்தப்பட்டதாக இந்திய பொலிஸார் கூறினர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# நளினியை கைது செய்ய காங்கிரஸ் கட்சியினர் மனு!



சிதம்பரம், நவ. 24

நளினிமீது வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என தமிழக காங்கிரஸ் கட்சியினர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில் 31 ஆண்டுகளாக சிறையிலிருந்த நளினி உள்ளிட்ட 6 பேர் அண்மையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையில், நளினி தன் மீது சுமத்திய குற்றச்சாட்டுகள் பொய் என்றும் இந்த வழக்கில் சாட்சி கூறிய ஓய்வுபெற்ற பொலிஸ அதிகாரி பொய்யான தகவலை கூறினார் என்றும் கூறியுள்ளார்.

அவர், ராஜீவ் கொலை குற்றத்தில் உண்மை குற்றவாளிகளை மறைக்கும் நோக்கத்தில் செயல்படுகிறார். எனவே, அவர் மீது மீண்டும் வழக்குப் பதிந்து விசாரிக்க வேண்டும்.

தற்போது நளினி உண்மைக்கு புறம்பாக கூறிவரும் கருத்தால் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பாதிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே, நளினி மீது வழக்குப் பதிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# தி.மு.க. இளைஞரணி செயலராக உதயநிதி!



சென்னை, நவ. 24

தி. மு. கவின் 15ஆவது உட்கட்சித் தேர்தல் நிறைவடைந்ததைத் தொடர்ந்து அக்கட்சியின் இளைஞரணி செயலாளராக உதயநிதி ஸ்டாலின் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில், தி. மு. கவின் உட்கட்சி தேர்தல் நடந்தது. இதில் தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகளுக்கான நியமனங்களுக்கு அக்கட்சியின் பொதுக் குழுவிலும் ஒப்புதல் பெறப்பட்டது. இதனைத் தொடர்ந்து அக்கட்சியின் பல்வேறு அணிகளுக்கான நியமனங்கள் குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அமைப்பு ரீதியாக தி. மு.கவில் 20இற்கும் மேற்பட்ட அணிகள் உள்ளன.

இதுதொடர்பாக திமுக பொதுச் செயலாளர் துரைமுருகன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், இளைஞர் அணி செயலாளராக உதயநிதி ஸ்டாலின் தெரிவாகியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கல்வெவ சிறிதம்ம தேரருக்கு பிணை



கொழும்பு, நவ. 24

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அனைத்து பல்கலைக்கழக பிக்கு மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் கல்வெவ சிறிதம்ம தேரர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கல்வெவ சிறிதம்ம தேரர், நேற்று அதிகாலை முகம் மறைக்கப்பட்ட நிலையில், கொழும்பு மேலதிக நீதவானின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்கு, சிறைச்சாலை அதிகாரிகளினால் அழைத்துச் செல்லப்பட்டார்.

தலா ஐந்து லட்சம் ரூபாய் வீதமான இரண்டு சரீர பிணைகளில் கீழ் விடுவிக்க நீதவான் இதன்போது உத்தரவு பிறப்பித்தார்.

சந்தேகநபருக்கு பிணை வழங்க சட்ட மாஅதிபர் தீர்மானித்துள்ளதாக, சட்ட மாஅதிபர் சார்பில் முன்னிலையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நீதவானுக்கு அறிவித்திருந்தார்.

இதையடுத்தே கல்வெவ சிறிதம்ம தேரருக்கு பிணை வழங்க நீதவான் தீர்மானித்தார்.

கல்வெவ சிறிதம்ம தேரருக்கு வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், மாதமொரு முறை குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 89 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த கல்வெவ சிறிதம்ம தேரர், பின்னர் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# நிமல் லான்ஸாவை தாக்க முற்பட்ட சமிந்த விஜேசிறி!

## சபையில் இருந்து நேற்று வெளியேற்றம்

கொழும்பு, நவ. 24

**ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறியை சபையை விட்டு வெளியேறுமாறு சபாநாயகர் அறிவித்தார்.**





பாராளுமன்றம் நேற்று புதன்கிழமை காலை ஆரம்பமானதும் வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான விவாதத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சா உரையாற்றினார்.

இதன்போது அவரை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தாக்க முயற்சித்தார்.

இதனையடுத்து, அவரை சபையைவிட்டு வெளியேறுமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்தார்.

இதன்படி சமிந்த விஜேசிறி நேற்றைய முழு நாள் விவாத நிகழ்வில் பங்கேற்க முடியாது என்று சபாநாயகர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி தேர்தலைப் பிற்போடும் திட்டம் இருப்பதாக கூறி பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற வாதப் பிரதிவாதங்களின் போதே இந்த சம்பவம் இடம்பெற்றது.

இதன்போது, உள்ளூராட்சித் தேர்தலை பிற்போடும் திட்டம் இல்லையென்றும் எனினும் உள்ளூராட்சிச் சபைகளின் உறுப்பினர் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என்று நிமல் லன்சா தெரிவித்துள்ளார். இதன் போதே, அவரை சமிந்த விஜேசிறி தாக்குவதற்கு முயற்சித்ததாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நாட்டுக்கு 500 மில்லியன் டொலர்களை பெற்றுத்தரமுடியாவிடில் இராஜினாமா!

## இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத்



கொழும்பு, நவ. 24

மாணிக்கக்கல் ஏற்றுமதி மூலம் எதிர்வரும் வருடம் நாட்டிற்கு 500 மில்லியன் டொலர் வருமானத்தை பெற்றுத் தருவதாகவும் இல்லையென்றால் அமைச்சர் பதவியை இராஜினாமா செய்வதாகவும் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை ஞரீயில் - ஒரு பில்லியன் டொலர் மதிப்புள்ள இரத்தின கற்கள் நாட்டை விட்டு வெளியே போயுள்ளன.

ஆனால் 170 மில் லியன் டொலர்கள் மட்டுமே நாட்டுக்கு கிடைத்துள்ளது.

இந்த நிலையில், இது குறித்து விவாதம் நடத்தி வருகிறோம். 180 நாட்களுக்குள் நாட்டுக்கு டொலர் வரவேண்டும்.

எனது முயற்சியால் அடுத்த ஆண்டு நாட்டுக்கு 500 மில்லியன் டொலர் வருமானத்தை பெற்றுத்தருவேன். அவ்வாறு இல்லாவிட்டால் அமைச்சர் பதவியில் இருந்து விலகுவேன் - என்றார். (அ)

# பாடசாலைகளை சுற்றி புலனாய்வுப் பிரிவினர்!

கொழும்பு, நவ. 24

பாடசாலை மாணவர்களுக்கு போதை மாத்திரைகள் உள்ளிட்ட போதைப் பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் பாடசாலை மாணவர்களிடம் இருந்து போதைக்காக பயன்படுத்தப்படும் மாத்திரைகள் மற்றும் போதைப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன், அந்த போதைப்பொருட்களை விற்பனை செய்தவர்களும் கைது செய்யப்பட்டனர்.

இதன்படி, பாடசாலைகளைச் சுற்றி புலனாய்வுப் பிரிவினர் வழமையாக கடமையில் ஈடுபடுத்தப்பட்டு, போதைப் பொருள் வர்த்தகர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார். (அ)

# 70 இலட்சம் ரூபா பெறுமதியான கஞ்சாவுடன் இரண்டு பேர் கைது

மன்னார், நவ. 24

மன்னார் - வெள்ளாங்குளம் பகுதியில் 70 இலட்சம் ரூபா பெறுமதியான கேரள கஞ்சாவுடன் இரண்டு பேர் கடற்படையினரால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டனர்.

மன்னார் - யாழ் பிரதான வீதி வெள்ளங்குளம் வீதித் தடுப்பில் சந்தேகத்திற்கிடமான லொறி ஒன்றை மறித்து சோதனையிட்டதில் லொறியில் இருந்து சுமார் 24 கிலோ 200 கிராம் கேரள கஞ்சா அடங்கிய 12 பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது வவுனியாவைச் சேர்ந்த 37 மற்றும் 45 வயதான இரண்டு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் லொறியுடன் இலுப்பைக்கடவை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இலுப்பைக்கடவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகின்றது

கொழும்பு, நவ. 24

இலங்கைக்கு நாளாந்தம் வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு நிலை காணப்படுவதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

நாளொன்றுக்கு சுமார் 1800 வரையில் அதிகரித்து காணப்படுவதாகவும் சுற்றுலாத்துறை அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

கடந்த காலப்பகுதியை கருத்திற் கொண்டு சுற்றுலாப் பயணிகளின் தினசரி வருகை பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சராசரியாக, நாளொன்றுக்கு சுமார் 2,000 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தருவதோடு, இம்மாதத்தில் இதுவரை 27 ஆயிரத்து 213 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளதாகவும் அவர்களில் பெரும்பாலானோர் ரஷ்ய பிரஜைகள் எனவும் சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# ஓமான் இலங்கை தூதரக பாதுகாப்பு இல்லத்தில் 77 பெண்கள்!

கொழும்பு, நவ. 24

ஓமானில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்பு இல்லத்தில் தற்போது தங்கியுள்ள இலங்கைப் பெண்கள் தொடர்பிலான அறிவிப்பை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் வெளியிட்டுள்ளது.

அதன்படி, பாதுகாப்பு இல்லத்தில் தற்போது 77 இலங்கைப் பெண்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அந்தப் பணியகம் தெரிவித்துள்ளது.

அவர்களில் 12 பேர் மாத்திரமே வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து நாட்டைவிட்டு வெளியேறியுள்ளதாக அந்தப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், அவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஓமான் மற்றும் டுபாயில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி மனித கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் இதுவரையில் 5 பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ள னர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வாக்குறுதிகள் வழங்கப்பட்டனவே தவிர இதுவரை தீர்வு எதுவும் கிடைக்கவில்லை



## *ஜனாதிபதி முன்னிலையில் சுமந்திரன் சுட்டிக்காட்டு*

*கொழும்பு, நவ. 24*

*கடந்த காலங்களில் வாக்குறுதிகள் மட்டுமே வழங்கப்பட்டதே தவிர இதுவரை தீர்வு எதுவும் முன்வைக்கப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.*

*வரவு-செலவுத்திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய எம்.ஏ. சுமந்திரன், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், கையகப்படுத்தப்பட்ட காணிகள் விடுவிப்பது மற்றும் தமிழர் பிரச்னைகள் குறித்து ஜனாதிபதி முன்னிலையில் சுட்டிக்காட்டினார்.*

*எவ்வாறாயினும் நல்லிணக்கம், மீள் குடியேற்றம், தொடர்பாக ஒருபுறம் பேசிக்கொண்டிருந்தாலும் அது நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என குற்றம் சாட்டிய அவர், இந்த விடயம் குறித்து விசாரணை செய்வதாக ஜனாதிபதியின் அறிவிப்பை வரவேற்பதாக கூறினார்.*

*தொல்பொருள் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் என்பன தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை கொண்டு மக்களின் காணிகளைக் கைப்பற்றும் செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்து வருவதாக சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.*

*தமிழ் மக்களின் முக்கிய பிரச்னைகளுக்கு தீர்வை வழங்குவதாக ஜனாதிபதி தொடர்ந்தும் தெரிவித்து வருவதை வரவேற்ற சுமந்திரன், நாட்டில் உள்ள அனைத்து மக்களும் திருப்தியடைய கூடிய வகையில் தீர்வு அமையவேண்டும் என்றும் குறிப்பிட்டார். (அ)*

# மக்களுக்கு சேவை செய்வதற்காக எதிர்க்கட்சிகள் இணையவேண்டும்

## *பிரதமர் தினேஷ் சபையில் கோரிக்கை*



*கொழும்பு, நவ. 24*

*அரசியலில் வெறுப்பு கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து மக்களுக்காக உழைக்க ஒன்றிணையுமாறு எதிர்க்கட்சிகளை பிரதமர் தினேஷ் குணவர்தன வலியுறுத்தியுள்ளார்.*

*நேற்று பாராளுமன்றத்தில் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே பிரதமர் இதனை தெரிவித்தார்.*

*முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எப் கென்னடியை மேற்கோள் காட்டி, நாடு தங்களுக்கு என்ன செய்திருக்கிறது என்பதை விடுத்து நாட்டுக்கு என்ன செய்ய முடியும் என எதிர்க்கட்சிகள் தங்களையே கேள்வி கேட்க ஆரம்பிக்கவேண்டும் எனவும் பிரதமர் இதன்போது கூறினார்.*

*மக்களின் இன்னல்களைப் போக்க அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகத் தெரிவித்த பிரதமர், அவற்றை நாசப்படுத்தவேண்டாம் எனவும் எதிர்க்கட்சிகளிடம் வேண்டுகோள் விடுத்தார். (அ)*

# தொழுநோயினால் பாதிக்கப்படும் குழந்தைகள் எண்ணிக்கை உயர்வு

*கொழும்பு, நவ. 24*

*நாட்டில் தொழுநோயால் பாதிக்கப்படுவரும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தொழுநோய் கட்டுப்பாட்டு பிரசாரம் தெரிவிக்கின்றது .*

*அதன் பணிப்பாளர் நிபுணர் வைத்தியர் பிரசாத் ரணவீர, கூறுகையில்-*

*கடந்த வருடம் முதல் தற்போது வரை, நாட்டில் பல்வேறு பகுதிகளில் இருந்து தொழுநோயால் பாதிக்கப்பட்ட சுமார் 250 குழந்தைகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.*

*இவர்களில் அதிகமானோர் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து பதிவாகியுள்ளனர்.*

*2021 முதல் 2022 ஆம் ஆண்டுவரை 14 வயதுக்கு குறைவான சுமார் 250 குழந்தைகள் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.*

*அதிகரித்து வரும் தொழுநோயாளிகளைக் கண்டறிந்து முறையான வைத்தியத்தை வழங்கவேண்டும். மக்களுக்கும் இந் நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும். குறிப்பாக உங்கள் தோலைவிட குறைந்த நிறமுள்ள ஒரு புள்ளி உங்களிடம் இருந்தால், இது முதன்மை அறிகுறியாகும். தொழுநோய், அல்லது அந்த புள்ளிகளில் உணர்வின்மை அல்லது கைகால்களில் உணர்வின்மை இருந்தால், அருகில் உள்ள தோல் மருத்துவமனைக்குச் செல்லவேண்டும்-என்றார். (அ)*

# இலங்கையில் இருந்து மேலும் 10 பேர் அகதிகளாக ராமேஸ்வரத்தில் தஞ்சம்!



*சென்னை, நவ. 24*

*தொடரும் பொருளாதார நெருக்கடியால் மேலும் 10 இலங்கை தமிழர்கள் நேற்று புதன் கிழமை காலை தனுஷ்கோடி அடுத்த முகுந்தராயர் சத்திரம் பகுதியைச் சென்றடைந்துள்ளனர்.*

*இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் உணவு பொருட்கள், அத்தியாவசிய தேவைகளுக்காக கடும் சிரமத்திற்கு ஆளாகி உள்ளனர்.*

*இதனால் கடந்த மார்ச் முதல் இலங்கையில் இருந்து 198 இலங்கை தமிழர்கள் தனுஷ்கோடிக்கு அகதிகளாக சென்றடைந்துள்ளனர்.*

*இந்நிலையில் இலங்கை வவுனியா மாவட்டம் கணேசபுரத்தை சேர்ந்த உதயசூரியன் அவரது மனைவி பரிமளம் மற்றும் அவரது நான்கு குழந்தைகள் மற்றும் வவுனியா மாவட்டம் புவரசம் குளம் பகுதியை சேர்ந்த புவனேஸ்வரி மற்றும் அவரது மூன்று குழந்தைகள் என இரண்டு குடும்பத்தை சேர்ந்த 10 பேர் இலங்கை மன்னாரில் இருந்து நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இரவு படகில் புறப்பட்டு தனுஷ்கோடி அருகே உள்ள முகுந்தராயர் சத்திரம் பகுதியில் நேற்று காலை சென்றடைந்தனர்.*

*தகவலறிந்த ராமேஸ்வரம் மரைன் பொலிஸார் இலங்கை தமிழர்களை மீட்டு மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.*

*விசாரணையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வால் குழந்தைகளை வைத்துக் கொண்டு இலங்கையில் வாழ வழி இல்லாததால் தமிழகத்திற்கு அகதிகளாக வந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.*

*பாதுகாப்பு வட்டார அதிகாரிகளின் விசாரணைக்கு பிறகு 10 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட உள்ளனர்.*

*பொருளாதார நெருக்கடி காரணமாக தமிழகத்திற்கு இலங்கையிலிருந்து சென்ற அகதிகள் எண்ணிக்கை 208 ஆக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (அ)*

# பாடசாலை வேலியால் உள்நுழைந்த மாணவர்களிடம் போதைப்பொருள்!

*கொழும்பு, நவ. 24*

*பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப் பொருள் விற்பனை செய்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*இச்சம்பவத்தில் கேகாலை நகரப் பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருளை விற்பனை செய்ததாக சந்தேகத்தில், கேகாலை லேக் வீதியில் வசிக்கும் 21 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாதகப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*கடந்த செவ்வாய்க்கிழமை காலை நேரம் கேகாலை நகர பாடசாலை ஒன்றுக்கு முன்னால் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாருக்கு நான்கு மாணவர்கள் மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளது.*

*அந்த மாணவர்கள் ஒரு இளைஞனுடன் பேசிக் கொண்டு வந்ததையும் பாடசாலையின் பிரதான வாயிலால் உட் செல்லாது பாடசாலை வேலி ஒன்றினுள் உட்புகுந்து சென்றதையும் அவதானித்துள்ளனர்.*

*இதன் காரணமாக பாடசாலை நிர்வாகத்திற்கு சம்பவத்தை தெரியப்படுத்தி ஆசிரியர் ஒருவரின் உதவியுடன் அவர்களது பாடசாலைப் பையை பரிசோதித்துள்ளனர்.*

*அப்போது ஒரு மாணவனின் பாடசாலைப் பையில் இருந்து 5 போதை மாத்திரைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.*

*இதனை அடுத்து மாணவர்களது பெற்றோர்கள் அழைக்கப்பட்டு பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட விசாரணைகளின்போது அந்த மாணவர்கள் நான்கு பேரும் போதை வில்லைகளை உற்கொண்டமை தெரிய வந்தது.*

*இதனையடுத்து சந்தேக நபரான இளைஞனை கேகாலை நகரில் வைத்து பொலிஸார் கைது செய்தனர்.*

*மேற்படி நான்கு மாணவர்களின் பெற்றோர்களும் கல்வி கற்றவர்கள் என்றும், கேகாலை நகரில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் உயர் பதவிகளில் உள்ளவர்கள் என்றும் பின்னர் தெரிய வந்துள்ளது. (அ)*

# போதை மாத்திரைகளுடன் யாழில் மூன்று பேர் சிக்கினர்

*யாழ்ப்பாணம், நவ. 24*

*தெல்லிப்பளை குற்றத்தடுப்புப் பொலிஸார் மேற்கொண்ட விசேட ரோந்து நடவடிக்கையில் இரு வேறு பகுதிகளில் போதை மாத்திரைகளுடன் மூவர் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.*

*19 வயது, 22 வயதுடைய இளைஞர்கள் முறையே 8 மற்றும் 10 போதை மாத்திரைகளுடன் கைதுசெய்யப்பட்டனர்.*

*இதேவேளை, சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது பெற்ற தகவலின்படி மல்லாகம் ரயில் நிலைய வீதியில் வைத்து 36 வயதுப் பெண்ணொருவர் 40 போதை மாத்திரைகளுடன் கைதுசெய்யப்பட்டார் என பொலிஸார் கூறினர்.*

*கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)*

# நாணய நெருக்கடி ஆபத்தில் இலங்கை

## ஜப்பானிய வங்கி எச்சரிக்கை

கொழும்பு, நவ. 24

நாணய நெருக்கடியில் இலங்கை உட்பட 7 நாடுகள் ஆபத்தில்இருப்பதாக ஜப்பானிய வங்கி ஒன்று எச்சரித்துள் ளது.

நொமுரா ஹோல்டிங்ஸ் என்ற ஜப்பானிய உயர்முகவரக வங்கி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இதன்படி, இலங்கை, எகிப்து, ருமேனியா, துருக்கி, செக் மக்கள் குடியரசு, பாகிஸ்தான் மற்றும் ஹங்கேரி ஆகிய னவே நாணயப் பிரச்னையில் ஆபத்தில் இருப்பதாக குறித்த வங்கி குறிப்பிட்டுள்ளது.

ஜப்பானிய வங்கி வழங்கியுள்ள மதிப்பெண்களின் அடிப்படையில், இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதன்படி, நாட்டின் வெளிநாட்டு நாணய கையிருப்பு, நாணய மாற்றுவிகிதம், நிதி உறுதிப்பாடு மற்றும் வரி விகிதங்கள் என்பன இதன்போது கருத்தில் எடுக்கப்படுகின்றன.

நொமுரா வங்கியின் மதிப்பெண்களின் அடிப்படையில், எகிப்துக்கு மோசமான மதிப்பெண்ணாக 165 வழங்கப்பட்டுள்ளது.

ருமேனியாவுக்கு 145 மதிப்பெண்கள் வழங்கப்பட்டுள்ளன. இலங்கை, துருக்கி ஆகியவற்றுக்கு 138 மதிப்பெண்கள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், செக் மக்கள் குடியரசு, பாகிஸ்தான், மற்றும் ஹங்கேரி ஆகிய நாடுகளுக்கு முறையே 126, 120 மற்றும் 100 மதிப்பெண்கள் வழங்கப்பட்டுள்ளன. (அ)

# கூரிய ஆயுதத்தினால் தாக்கி பெண் கொலை

கொழும்பு, நவ. 24

நுவரெலியா - ஹெலகம பகுதியில் இரு பெண்களை நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இறந்தவரின் மகள் குடும்பத் தகராறு காரணமாக கணவரைப் பிரிந்து பல ஆண்டுகளாக தனது தாய் வீட்டில் வசித்து வந்துள்ளார். இவர்கள் இருவரும் கிராம அதிகாரி அலுவலகத்துக்கு உலர் உணவு பெறச் சென்றுள்ளனர். அங்கு மகளின் கணவர் பெயரில் உலர் உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள மகளும் தாயும் முயற்சித்தபோது மகளின் கணவர் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கூரிய கத்தியை எடுத்து தாயையும், மனைவியையும் கடுமையாக தாக்கி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

படுகாயமடைந்த தாயும், மகளும் தெரிபஹா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக ரிக்கில கஸ்கட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் தாய் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

உயிரிழந்தவர் முகுனகஹ பிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் 50 வயதுடையவராவார். இந்நிலையில் 27 வயதுடைய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் வலப்பனை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளனர். (அ)

# தூதரக அதிகாரி குறித்து பெப்ரவரியில் முறைப்பாடு

## ஆயினும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை

கொழும்பு, நவ. 24

பாலியல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள ஓமானுக்கான இலங்கை தூதரகத்தின் அதிகாரியான குஷான் என்பவர் தொடர்பில் கடந்த பெப்ரவரியில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றி ருந்தபோதிலும், அது குறித்து நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென கோபா குழுவில் (அரசாங்க கணக்குகள் பற்றி குழு) தெரியவந்துள்ளது.

தற்போது குற்றச்சாட்டுக்கு இல்லாகியுள்ள, குறித்த தூதரக அதிகாரி பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், அவரை நாட்டுக்கு மீள அழைக்கவுள்ளதாகவும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர் விமலசிறி தெரிவித்துள்ளார்.

ஊடகங்களில் செய்தி வெளிவந்ததன் பின்னரா அவர் தொடர்பில் நடவடிக்கை எடுக் கப்பட்டது என கோப் குழு உறுப்பினர் பாராளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய வினவியபோது, இல்லை அதற்கு முன்னதாகவே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டி ருந்ததாகவும் திகதி சரியாக ஞாபகம் இல்லை என்றும் செயலாளர் பதிலளித்தார்.

அதன்போது, கடந்த பெப்ரவரி மாதத்திலேயே குறித்த தூதரக அதிகாரி தொடர்பில் உள்ளக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு அப்போதைய கோப் குழு தலைவர் உத்தரவிட்டதாக கோப் குழுவில் பங்கேற்றிருந்த, தேசிய கணக்காய்வாளர் அலுவலகத்தின் மேலதிக கணக்காய்வாளர் கூறினார்.

எனினும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதன்பின்னர் குறித்த தூதரக அதிகாரி, நிதி மோசடி, சான் றிதழ் மோசடிகளிலும் ஈடுபட்டுள்ளார். அது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து, வாக்குமூலம் வழங்கிய, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பொதுமுகாமையாளர் டி.டி.பி சேனாநாயக்க, "குறித்த அதிகாரி தொடர்பில் இரு பெண்கள், தமது பணியகத்துக்கு பாலியல் முறைப்பாடு செய்ததாக தெரிவித்தார்.

அதன்படி, மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குற்றச்சாட்டு உறுதியாகவில்லை. எனினும், தூதுவரின் அறிக்கையை பெற்று அவரை மீள அழைக்கத் தீர்மானித்தோம்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை முன்னெடுப்பதாக எமக்கு தகவல் அனுப்பியதைத் தொடர்ந்து குறித்த அதிகாரி பணி நீக்கம் செய்யப்பட்டார். எனினும், அவர் நாடு திரும்புவதற்கு அரசாங்கம் எந்த உதவிகளையும் வழங்காது" என்றார்.

பெப்ரவரியில் கிடைத்த முறைப்பாடு தொடர்பில் நவம்பரில் விசாரணை செய்வதென்றால் எவ்வாறு குற்றத்தை நிரூபிப்பது என்று ஹரினி அமரசூரிய கேள்வி எழுப்பினார்.

எவ்வாறாயினும், குறித்த அதிகாரி தொடர்பில் தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

முறைப்பாடு கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பத்தில் தான் செயலாளராக இல்லாதபோதிலும், தற்போது அதற்கான பொறுப்பை தாமே ஏற்றுக் கொள்வதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர் விமலசிறி தெரிவித்துள்ளார். (அ)

# இ.போ.ச ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, நவ. 24

2022 ஆம் ஆண்டு அரச முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் நேற்று நாரஹேன்பிட்டியில் உள்ள தலைமை அலுவலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரச முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க சம்பள சுற்றறிக்கையை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இலங்கை போக்குவரத்து சபையின் கீழ் நாடளாவிய ரீதியில் பணிபுரியும் ஊழியர்கள் குழுவொன்று நாரஹேன் பிட்டியில் உள்ள பிரதான காரியாலயத்திற்கு முன்பாக ஒன்று கூடி சுற்ற றிக்கையை உடனடியாக அமுல்படுத் துமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

2006 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க சம்பள சுற்றறிக்கையின் ஊடாக, தகுதியற்ற உத்தியோகத் தர்கள் அதிக சம்பளம் பெறுவதாக இந்தக் குழு குற்றம் சுமத்தியது.

இக்குழுவினர் போக்குவரத்து சபை தலைமை அலுவலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது, போக்குவரத்து சபையின் தலைமை அலுவலகத்தினுள் இருந்து 2006 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க சம்பள சுற்றறிக்கையின் படி சம்பளம் பெறும் ஊழியர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் நிலைமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர சம்பவ இடத்திற்கு பொலிஸார் அழைக்கப்பட்டனர்.

இலங்கை போக்குவரத்துச் சபை யின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க குறித்த இடத்திற்குச் சென்று பிரதான காரியாலயத்திற்கு வெளியில் இருந்த ஊழியர்களுடன் கலந்துரையாடிய பின்னர் போக்குவரத்து அமைச்சில் அவர்களது பிரதிநிதிகள் சிலருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். (அ)

# ரயில்வேக்கு சொந்தமான பழுடைந்த இரும்பை குறைந்த விலைக்கு விற்பனை செய்ய முயற்சி!

கொழும்பு, நவ. 24

இலங்கை ரயில்வேக்கு சொந்தமான 7,000 மெற்றிக் தொன் பழுடைந்த இரும்பைக் குறைந்த விலைக்கு விண்ணப்பித்த ஒரு நிறுவனத்திடம் ஒப்படைக்க போக்குவரத்து அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருவதாக ரயில்வே தொழிற்சங்கங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்த இரும்பை விற்பனை செய்வதற்காக கோரப்பட்ட விலைமனுக் கோரலில் ஏற்பட்ட குறைபாடு காரணமாக, அப்போதைய போக்குவரத்து அமைச்சர் அந்த விலைமனு கோரலை இரத்துச் செய்ததாகவும், அங்கு ஒரு கிலோ பழைய இரும்பு 65 ரூபாவுக்கு ஏலம் விடப்பட்டதாகவும் தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், இம்முறை இரும்பு கிலோ ஒன்று 42 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் அவ்வாறு இடம்பெற்றால் அது இலங்கை ரயில்வே திணைக்களத்துக்கு பல கோடி ரூபா நட்டம் ஏற்படும் எனவும் தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (அ)

# வடக்கு பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், நவ. 24

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடைமுறைப்படுத்தும் எழுத்தாளர் ஊக்குவிப்பு வட்டத்தை உருவாக்கும் நோக்கில் எழுத்துத்துறையில் ஈடுபட்டுவரும் ஆர்வமுள்ள எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களை தங்கஎது பிரதேச கலாசார உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்பாக பிரதிப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி அமைச்சு, செம்மணி வீதி, நல்லூர் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ)

# பாகிஸ்தானின் புதிய இராணுவ ட்ரோன்

## ‘ஷாப்பர்’ எத்தனை சக்தி வாய்ந்தது?

- ரியாஸ் சுஹைல்

கண்காணிப்புக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்ட ட்ரோன்கள் நீண்ட காலமாக பாகிஸ்தான் வசம் உள்ளன. ஆனால் கராச்சியில் நடந்து வரும் ஆயுத கண்காட்சியில் பாகிஸ்தானின் ஆயுத உற்பத்தியாளர்கள், தாக்குதலுக்கு பயன்படுத்தக்கூடிய ட்ரோன்களை முதல் முறையாக காட்சிக்கு வைத்திருப்பது பலரது புருவங்களை உயர்த்தியுள்ளது.

நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு கராச்சியில் நடைபெறும் இந்த ஆயுதக் கண்காட்சியில் பாகிஸ்தானின் முப்படைகளின் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

நவம்பர் 18ஆம் திகதி தொடங்கிய இந்தக் கண்காட்சியில் சீனா, துருக்கி தவிர, வேறு பல நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் பங்கேற்கின்றன.

**ஆளில்லா விமானங்களின் தன்னிறைவு**

அமெரிக்க ஆளில்லா விமானங்கள் பாகிஸ்தானின் எல்லைப் பகுதிகளில் தீவிரவாதிகளை குறிவைத்து தாக்கத் தொடங்கியபோது பாகிஸ்தான் மக்கள் முதல் முறையாக ட்ரோனின் பெயரை கேள்விப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானின் எல்லையை ஒட்டிய பாகிஸ்தான் பகுதிகளில் அமெரிக்கா பல ஆளில்லா விமானத் தாக்குதல்களை நடத்தியது. இதில் பலர் கொல்லப்பட்டனர்.

கண்காணிப்பு ஆளில்லா விமானங்களை (உளவுத்துறைக்கானவை) தயாரிக்கத் தொடங்கியதன் மூலம் ‘ட்ரோன் உலகில்’ பாகிஸ்தான் முதல் அடியை எடுத்து வைத்தது. கண்காணிப்புக்கு பயன்படுத்தப்பட்ட இந்த ஆளில்லா விமானங்கள் இதற்கு முன்பு நடந்த ஆயுத கண்காட்சிகளில் காணப்பட்டன.

பாகிஸ்தான் வெளிநாடுகளைச் சார்ந்து இருக்கும் தொழில்நுட்பங்களை உள்நாட்டிலேயே படிப்படியாக உருவாக்க வேண்டும் என்று பாகிஸ்தான் அரசு தங்களிடம் தெளிவாக கூறியதாக பாகிஸ்தான் அரசின் நிறுவனமான குளோபல் இன்டஸ்ட்ரியல் அண்ட் டிபென்ஸ் சொல்யூஷன்ஸ் தலைமை நிர்வாக அதிகாரி அசத் கமால் கூறுகிறார். இதனால் அந்நிய செலாவணி சேமிக்கப்படும் என்றார் அவர்.

2018 இல் ‘ஐடியாஸ்” இன் கடைசி கண்காட்சியில் பராக் என்ற கண்காணிப்பு ட்ரோன் உலகின் பார்வைக்கு வைக்கப்பட்டது. அதன் பணி வீடியோக்களை உருவாக்குவது மற்றும் உயர் தெளிவுத் திறன் புகைப்படங்களை எடுப்பது மட்டுமே.

‘அதற்குப் பிறகு நாங்கள் எங்கள் அடுத்த திட்டத்தின் பணியை தொடங்கினோம். இலக்கைப் பார்ப்பது மட்டுமல்ல, அதைச் சுற்றி வளைக்கவும், தேவைப்பட்டால் அதை அழிக்கவும் முடியும் திறன் ராணுவத்துக்குத் தேவைப்பட்டது. அதன் பிறகு ஆராய்ச்சி செய்து ஷாப்பர்-2 ட்ரோன் தொடர்பான வேலைகள் துவக்கினோம்,” என்று அசத் கமால் விளக்கினார்.

“நீங்கள் ஒரு தொழில்நுட்பத்தை ஒருங்கிணைக்கும் போது அல்லது அதை வேறொரு நாட்டிலிருந்து பெறும்போது, சில காலத்திற்குப்பிறகு அந்த நாடு உங்களுக்கு தொழில்நுட்பத்தை வழங்குவதை நிறுத்தினால், உங்கள் தயாரிப்பு முழுமையடையாமல் நின்றுபோகும். பின்னர் அதை நீங்களும் பயன்படுத்த முடியாது. அல்லது அதை மீட்டெடுக்கவும் முடியாது. இந்த ஆளில்லா விமானத்தின் அடிப்படை தொழில் நுட்பம் பாகிஸ்தானிலேயே உருவாக்கப்பட்டது,” என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**பாகிஸ்தானில் தயாரான ஷாப்பர்-2**

பாகிஸ்தானின் முன்னோடி ஆளில்லா விமானம் ஷாப்பர்-2 ஆகும். இது இப்போது பாகிஸ்தானின் ராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையில் இணைக்கப்பட்டு விட்டது.

அதை கண்காட்சியில் பார்வைக்கு வைத்து, மற்ற நாடுகளுக்கு விற்கவும் அந்நாட்டு அரசு விரும்புகிறது.




‘ஷாப்பர்-2” ஆயிரம் கிலோமீட்டர் வரை பறந்து தனது இலக்கைத் தாக்க வல்லது. இந்த ஆளில்லா விமானம் செயற்கைக்கோளை தொடர்பு கொள்ள முடியும். இரவோ, பகலோ எந்த நடவடிக்கையிலும் வெற்றிகரமாக செயல்படும். இந்த ட்ரோன் தனது இலக்கை லேசர் மூலம் கண்டறிந்து, பின்னர் ஏவுகணை மூலம் குறி வைக்கிறது” என்று அசத் கமால் விளக்குகிறார்.

ஷாப்பர்-2 , 120 நாட்ஸ் வேகத்தில் பறக்கக்கூடியது. இதன் டேக் ஆப் வேகம் 80 நாட்ஸ் முதல் 85 நாட்ஸ் வரை இருக்கும். அதன் பறப்பு வேகம் 80-85 நாட்ஸாக இருக்கும்.

இதன் ஆரம் சுமார் 1050 கிலோமீட்டர்கள் மற்றும் தரவு இணைப்பு வரம்பு 300 கிலோமீட்டர்கள். இந்த ஆளில்லா விமானம் பறக்கும் போது தனது இயந்திரத்தை மறுதொடக்கம் செய்யும் திறனையும் கொண்டுள்ளது.

Global Industrial & Defense Solutions இன் பிற ட்ரோன் தயாரிப்புகளில் ஷாப்பர்-1, இகாப் ட்ரோன் சீரீஸ் ஆகியவை அடங்கும். அவை வெவ்வேறு வேகம், தூரம் மற்றும் ஆயுதங்களை எடுத்துச்செல்லும் திறன் கொண்டவை.

**அபாபில் ட்ரோன் சீரீஸ்**

பாகிஸ்தானின் ஆயுதத் தொழிற்சாலை முன்பு ‘அபாபில்’ என்ற பெயரில் கண்காணிப்பு ஆளில்லா விமானத்தை உருவாக்கியது. தற்போது இந்த ஆளில்லா விமானங்களும் தாக்குதல் ட்ரோன்களாக மாற்றப்பட்டுள்ளன. அவற்றிலும் தற்போது ஆயுதங்கள் பொருத்தப்பட்டுள்ளன. பாகிஸ்தானின் பழங்குடிப் பகுதிகளில் உள்ளூர் மக்கள் ட்ரோனுக்கு ’அபாபில்’ என்று பெயரிட்டனர் என்பது இங்கு நினைவுகூரத்தக்கது.

‘அபாபில் சீரீஸ் ட்ரோன்கள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டவை. இந்த எல்லா ஆளில்லா விமானங்களும் இரவிலும், பகலிலும் செயல்படும் திறன் கொண்டவை” என்று பாகிஸ்தான் ஆயுதத் தொழிற்சாலையின் ட்ரோன் பிரிவின் தலைவர் ரியாஸ் அகமது தெரிவித்தார்.

‘அபாபில் பைவ் ஆளில்லா விமானம் ஐந்து கிலோ வரை எடையை சுமக்கக் கூடியது. இதில் இரண்டு மோர்டார் குண்டுகளை பொருத்த முடியும். ஒரு மோர்டாரின் அளவு 16 மிமீ மற்றும் மற்றொன்று 18 மிமீ. இது முப்பது கிலோமீட்டர் தூரம்வரை சென்று தாக்கும் திறன் கொண்டது. அதன் வேகம் மணிக்கு நாற்பத்தைந்து கிலோமீட்டர். இந்த ஆளில்லா விமானம் ஒன்றரை மணி நேரம் பறக்க முடியும்” என்றும் அவர் கூறினார்.

அபாபில் வி-5, எங்கு வேண்டுமானாலும் செங்குத்தாக பறக்கத் தொடங்கவோ, தரையிறங்கவோ முடியும் என்று அவர் குறிப்பிட்டார். மணிக்கு 120 கிமீ வேகத்தில் பறக்கக்கூடிய இந்த அதிவேக ஆளில்லா விமானம், இரண்டு முதல் மூன்று மணி நேரம் வரை கண்காணிப்பு பணியை செய்யமுடியும். இது சேமிப்புத் திறனையும் கொண்டுள்ளது. ஐந்து கிலோகிராம் வெடிமருந்துகளை இந்த ட்ரோனால் எடுத்துச் செல்ல முடியும். எந்த ஒரு இலக்கையும் தாக்க இதை பயன்படுத்தலாம்.

அபாபில்-10 ஆளில்லா விமானம் பத்து கிலோ எடையுள்ள ஆயுதத்தை சுமந்து செல்லக்கூடியது. 30 கிலோமீட்டர்கள் வரை உள்ள இலக்குகளை தாக்கவல்லது. இது 3000 மீட்டர் உயரம் வரை பறக்க முடியும், அதேசமயம் ஒரு கிலோமீட்டர் உயரத்தை இது எட்டிய பிறகு அதை மனித கண்களால் பார்க்க முடியாது. இந்த மூன்று ட்ரோன்களையும் ஒரே ஆபரேட்டரால் இயக்க முடியும்.

‘அவற்றைக் கட்டுப்படுத்த மூன்று வழிகள் உள்ளன. முதலாவது ஒரு போர்ட்டபிள் யூனிட். அது எங்கிருந்து வேண்டுமானாலும் பறக்கத்தொடங்க முடியும். இரண்டாவது இரண்டு ஆபரேட்டர்களைக் கொண்ட இரட்டை கட்டுப்பாட்டு யூனிட். ஒருவர் துப்பாக்கி சூடு கேமராவை கட்டுப்படுத்துவார். மற்றொருவர் வரைபடத்தின். உதவியுடன் ட்ரோனை இயக்குவார் ,” என்று ரியாஸ் அகமது கூறினார்.

மூன்றாவது வழி ஒற்றைப் பயன்பாட்டுக்கானது. இதில் இரட்டைத் திரைகள் உள்ளன. அவற்றில் ஒன்று கேமரா பீட் மற்றும் மற்றொன்றில் வரைபடத்தின் உதவியுடன் திசைகளை வழங்கும் வசதி உள்ளது.

**வானிலை மற்றும் வெப்பநிலை ஆற்றல்**

பாகிஸ்தானில் பனிப்பகுதிகள், பாலைவனங்கள், கடல் மற்றும் சமவெளிப் பகுதிகள் உள்ளன. போர், வானிலையையும் நிலப்பரப்பையும் பார்ப்பதில்லை என்று குளோபல் இன்டஸ்ட்ரியல் அண்ட் டிபென்ஸ் சொல்யூஷன்ஸின் தலைமை நிர்வாக அதிகாரி அசத் கமால் கூறுகிறார்.

‘பாகிஸ்தான் ராணுவத்திற்கு மிகவும் கடுமையான தேவைகள் உள்ளன. மேலும் எங்களிடம் மைனஸ் டிகிரி உள்ள நிலப்பரப்பு முதல் மிக வெப்பமான பாலைவன நிலப்பரப்பு வரை உள்ளது. எனவே எங்கள் ராணுவத்தில் எந்த ஆயுதம் இணைக்கப்படுகிறதோ, அது உலகின் எந்த ராணுவத்திலும் சேரமுடியும்,’ என்று அவர் குறிப்பிட்டார்.



‘இந்த ட்ரோன்கள் நாட்டின் வடக்குப் பகுதிகளிலும் சோதிக்கப்படுகின்றன. அவை மழை மற்றும் பாலைவனத்திலும் சோதிக்கப்படுகின்றன. அதன் பிறகு அவை சோதனை பறப்பை வெற்றிகரமாக முடித்து பாகிஸ்தான் ராணுவத்தின் படைகளில் சேருகின்றன என்று அவர் கூறுகிறார்.

புதிய தொழில்நுட்பம் இரண்டு வழிகளில் அளவிடப்படுகிறது அல்லது சோதிக்கப்படுகிறது என்று பாகிஸ்தான் ஆயுதத் தொழிற்சாலையின் செய்தித் தொடர்பாளர் சல்மான் கான் கூறுகிறார். ஒன்று, இந்த ஆயுதங்களைப் பயன்படுத்தும் நபரின் தேவைகள் என்ன என்பது. ஆயுதத்தை தயாரிப்பவர் மற்றும் பயன்படுத்துபவர் இருவரும் சேர்ந்து அதை மதிப்பீடு செய்து, அது தொழில்நுட்ப ரீதியாக சோதிக்கப்படுகிறது.

இது தவிர, பாகிஸ்தானுக்குள்ளேயே உருவாக்க வேண்டும் என்றால், தற்போதுள்ள தொழில்நுட்பம் என்ன, என்னென்ன புதிய பொருட்களை வாங்க வேண்டும் என்ற வகையிலும் மதிப்பீடு செய்யப்படுகிறது.

**எந்த நாடுகள் பாகிஸ்தானிடம் ஆயுதங்களை வாங்குகின்றன?**

இந்த ஆயுத கண்காட்சியில் துருக்கியின் ஆளில்லா விமானங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த ட்ரோன்கள் துருக்கி ராணுவத்துடன் கூடவே அதன் நட்பு நாடுகளாலும் பயன்படுத்தப்படுகின்றன.

ஒரு குறிப்பிட்ட நபரை குறிவைப்பது முதல் ஏவுகணையை ஏவுவது வரை இவை பயன்படுத்தப்படுகின்றன.

இது தவிர, சீன பாதுகாப்பு அமைச்சகத்தின் பல வகையான ஆளில்லா விமானங்கள் மற்றும் புதிய ஆயுதங்கள், இந்த கண்காட்சியில் இடம்பெற்றன. அவற்றில் புதிய ட்ரோன்களின் மாதிரிகளும் உள்ளன. சீனாவின் ஆளில்லா விமானத்தில் பல வகையான ஆயுதங்களை பொருத்தமுடியும்.



உலக அளவில் ராணுவ ஆயுதங்களை தயாரித்து விற்கும் மற்றும் வாங்கும் நாடுகளில் பாகிஸ்தானும் ஒன்று.

பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களை 16க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளதாக குளோபல் இன்டஸ்ட்ரியல் அண்ட் டிபென்ஸ் சொல்யூஷனின் தலைமை நிர்வாக அதிகாரி அசத் கமால் கூறுகிறார்.

வங்கதேசம், இலங்கை, மத்திய ஆசிய நாடுகள், மலேசியா, ஆப்பிரிக்காவில் அல்ஜீரியா, காங்கோ, தென் அமெரிக்க நாடான பெரு போன்றவை இதில் அடங்கும்.

ஷாப்பர்-2 ஏற்றுமதியிலும் இந்த நிறுவனம் ஆர்வமாக உள்ளது. அதே நேரத்தில், தங்களின் ‘அபாபில் தொடர்’ விரைவில் பாகிஸ்தான் ராணுவத்தில் பயன்படுத்தப்படும் என்றும், சில வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் அதில் ஆர்வம் காட்டியுள்ளனர் என்றும் பாகிஸ்தான் ஆயுதத் தொழிற்சாலை கூறுகிறது.

பாகிஸ்தான் ஆயுதத் தொழிற்சாலை, முப்பது கோடி டாலர்களுக்கும் அதிகமான மதிப்புள்ள ஆயுதங்களை நாற்பதுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு விற்பனை செய்துள்ளது என்று அதன் செய்தி தொடர்பாளர் தெரிவித்தார்.

**(பிபிசி)**

# வெற்றிகரமான நல்லிணக்கத்துக்கு

## மக்களின் நல்லெண்ணமும் நம்பிக்கையும் அவசியம்



**கலாநிதி ஜெகான் பெரேரா**

தமிழ்த் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அடுத்த வருடம் இலங்கையின் 75 வது சுதந்திர தினம் கொண்டாடப்படும் நாட்களில் தீர்வொன்றைக் காணப்போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியதை தமிழ் அரசியல் சமுதாயம் ஓரளவு சந்தேகத்துடனேயே நோக்கியிருக்கிறது. 1960 களில் இருந்து அடுத்தடுத்து பதவிக்குவந்த அரசாங்கங்கள் அளித்த வாக்குறுதிகள் முழுமனதுடன் ஒருபோதும் நிறைவேற்றப்படவில்லை என்பதை அவர்கள் அறிவார்கள். ஜனாதிபதியின் முன்னைய ஆட்சிக்காலங்களும் எந்த வகையிலும் விந்தியாசமானவையாக அமையவில்லை.

2015 - 2019 காலப்பகுதியில் அதிகாரப்பரவலாக்கல் கோட்பாட்டை உள்ளடக்கிய புதிய அரசியலமைப்பு ஒன்றைக் கொண்டுவருவதாக விக்கிரமசிங்க பிரதமர் என்ற வகையில் உறுதியளித்தார். ஆனால், 2018 பிற்பகுதியில் 52 நாள் சதி முயற்சியின்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவரை நியாயமில்லாத வகையில் பதவி நீக்கம் செய்தார். அவரை மீண்டும் பதவியில் அமர்த்துவதற்கான போராட்டத்தில் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் இரா. சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன் போன்ற தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர்கள் முன்னின்றார்கள். விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராக பதவியேற்றபோது அரசியலமைப்பு சீர்திருத்த உறுதிமொழியை நிறைவேற்றுவார் என்ற ஒரு எதிர் பார்ப்பும் நம்பிக்கையும் இருந்தது. ஆனால் எதும் நடக்கவில்லை. மாகாணசபை தேர்தல்கள் கூட நடத்தப்படவில்லை.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணும் முயற்சிகளுக்கு புறம்பாக புதிய உண்மை மற்றும் நல்லிணக்க செயன்முறையொன்றுக்கும் தலைமை தாங்கி வழிநடத்த விக்கிரமசிங்க முன்வந்திருக்கிறார். இலங்கையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை அமைப்பதற்கு தென்னாபிரிக்காவின் ஆதரவைப் பெறுவதற்கு அந்நாட்டு ஜனாதிபதி சிறில் ரமபோசாவை சந்தித்து அவர் கலந்துரையாடினார். உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான தனது கோட்பாடு குறித்து சிவில் சமூக தலைவர்களுடன் அண்மையில் கருத்துக்களை பரிமாறிய வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி யோசனைகளை முன்வைக்குமாறு அவர்களைக் கேட்டுக்கொண்டார். இந்த ஆணைக்குழுவை வெற்றிகரமான தாக்குவதற்கான உறுதியான அரசியல் துணிவாற்றல் இருப்பதாக அவர் நம்பிக்கை வெளியிட்டார். ஆயுதப்படைகளும் அவற்றின் மீதான குற்றச்சாட்டுக்களை தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புவதனால் உண்மை ஆணைக்குழு கோட்பாட்டுக்கு ஆதரவாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

தற்சமயம் இலங்கை ஆயுதப்படைகளின் சகல பிரிவுகளுமே சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களினாலும் சில வெளிநாட்டு அரசாங்கங்களினாலும் கறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அத்தகைய ஆணைக்குழுவொன்று நம்பகத்தன்மையுடையதாகவும் மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடியதாகவும் அமைவதற்கு கருத்தொருமிப்பைக் காண்பதில் வெளியுறவு அமைச்சர் அக்கறை கொண்டிருக்கிறார்.

ஜனாதிபதி விக்கிரமசிங்கவும் அரசாங்கமும் தாங்கள் செய்வதை உண்மையில் அக்கறையுடனும் நேர்மையாகவுமே செய்வதாக பொதுமக்களை நம்பவைப்பதில் பெரும் சவாலை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. தென்னாபிரிக்காவின் நல்லிணக்கச் செய்முறைகளைப் பற்றி ஆராய தூதுக்குழுவொன்றை அந்த நாட்டுக்கு அனுப்புவதற்கு அரசாங்கம் திட்டமிடுவதாக செய்திகள் வருகின்றன. அத்தகைய ஆய்வுகள் கடந்த காலத்திலும் மேற்கொள்ளப்பட்டன.

சனத்தொகையில் ஒரு பிரிவினருக்கு ஒரு நேரத்தில் உண்மையையும் நல்லிணக்கத்தையும் கொடுக்கமுடியாது. உண்மையையும் நல்லிணக்கத்தையும் பிரிவு பிரிவாக செய்யமுடியாது. அவற்றை தமிழர்களுக்கு கொடுத்து சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இல்லாமல் செய்யமுடியாது. இரு மாணவ தலைவர்களை நீண்ட நாட்களாக தடுத்துவைத்திருப்பது உண்மையும் இல்லை, நல்லிணக்கமும் இல்லை. அரசாங்கத்தின் நீதியுணர்வு சமத்துவமானதாக இருக்க வேண்டும். சகல சமூகங்கள் மீதுமான கடப்பாட்டை அரசாங்கம் வெளிக்காட்ட வேண்டியது அவசியம்.

**தேர்தல்களை ஒத்திவைத்தல்**

ஊழல், வளங்களின் முறைகேடான ஒதுக்கீடை ஒழிக்கக்கூடியதும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தக்கூடியதுமான முறைமை மாற்றம் ஒன்றுக்கான போராட்ட இயக்கத்தின் கோரிக்கை பல்கலைக்கழக மாணவர்களுடன் மட்டுப்பட்ட ஒன்றல்ல. மக்கள் போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களின் வடிவில் வெளிப்படையாக காண்பிக்கப்படாவிட்டாலும் அந்த கோரிக்கை மிகவும் பரந்த ஒரு தளத்தைக் கொண்டதாகும். இரு மாணவ தலைவர்களையும் மற்றையவர்களையும் போன்று கைது செய்யப்பட்டு நீண்டகாலத்துக்கு தடுத்து வைக்கப்படக்கூடும் என்ற பயத்தில் தான் தாங்கள் அண்மைய போராட்ட இயக்கத்தில் தீவிரமாக பங்கேற்கவில்லை என்று மட்டக்களப்பில் சிவில் சமூக சந்திப்பொன்றில் கடந்தவாரம் மௌலவி ஒருவர் தெரிவித்தார்.

மாணவ தலைவர்கள் நீதியற்ற முறையில் தடுத்துவைக்கப்பட்டிருப்பதற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் மிகவும் பெரியவையாக இருக்கின்றன. ஆனால், அரசாங்கம் விட்டுக்கொடுப்பதாக இல்லை என்றும் அவர் சொன்னார். இத்தகைய சூழ்நிலையில் மாற்றத்தை விரும்புகின்ற போதிலும் கைது செய்யப்படுவதை விரும்பாத மக்கள் தங்களது விருப்பங்களையும் அபிலாசைகளையும் வெளிப்படுத்த தங்களது ஜனநாயக உரிமையை பயன்படுத்த தேர்தல்களை மாத்திரமே எதிர்பார்த் திருக்கமுடியும்.

ஜனாதிபதி விக்கிரமசிங்க பிரச்சினைகளை தீர்ப்பதற்கான விருப்பத்தையும் ஜனநாயக தகுதிப்பாடுகளையும் கொண்டிருக்கின்ற போதிலும், தற்போதை தருணத்தில் அவர் தேர்தல்களை நடத்துவதற்கு தயக்கத்தை வெளிக்காட்டுகின்றார். இரு வகையான தேர்தல்கள் நடத்தப்படவேண்டியவையாக இருக்கின்றன. உள்ளூராட்சி தேர்தல்களும் மாகாண சபை தேர்தல்களுமே அவை. விக்கிரமசிங்க அதிகாரப்பதவியில் இருந்த வேளைகளில் எல்லாம் பொருளாதார மீட்சிக்கும் இனப் பிரச்சினைத் தீர்வுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கிறார். 2002- 2004, 2015 -2019 காலப்பகுதிகளில் பிரதமராக பதவியில் இருந்த இரு சந்தர்ப்பங்களிலும் தேசிய தலைவர் என்ற வகையில் அவர் இதைச் செய்திருந்தார்.

துரதிர்ஷ்டவசமாக, அவ்விரு சந்தர்ப்பங்களிலும் அவர் அதிகாரத்தை இழந்தார். அடுத்து வந்த தேர்தல்களில் அவர் கடுமையான தோல்வியைக் கண்டார். நிதியமைச்சையும் தன்வசம் வைத்திருக்கும் ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழான தற்போதைய அரசாங்கம் சர்ச்சைக்குரிய பொருளாதார சீர்திருத்தத்தை முன்னெடுக்கிறது. சர்வதேச நிதிவழங்கும் நிறுவனங்களின் குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் பிரகாரமே இந்த சீர்திருத்தத்தை முன்னெடுக்க வேண்டியிருக்கிறது. மறுபுறத்தில் உணர்ச்சிபூர்வமான தேசிய நல்லிணக்க முயற்சிகளையும் கையாளப் போவதாகவும் அவர் சூளுரைத்திருக்கிறார். இந்த பிரச்சினையை அவர் 2002 ஆம் ஆண்டு 'எரிமலை மீது இருப்பது போன்றது' என்று வர்ணித்தார்.

இத்தகையதொரு பின்புலத்தில், தேர்தல் சீர்திருத்தங்களை முன்னெடுப்பதில் ஜனாதிபதி அக்கறை காட்டுகிறார். தவறான ஒரு நேரத்தில் அவர் செய்யும் இந்த காரியம் நியாயப்படுத்தப்படக்கூடியதல்ல. ஏற்கெனவே ஒரு வருட காலத்துக்கு பின்போடப்பட்ட உள்ளூராட்சி தேர்தல்களை அடுத்த வருடம் மார்ச் மாதத்துக்கு முன்னர் நடத்தப்படவேண்டியவையாக இருக்கின்றன. அரசாங்கம் முன்னெடுக்கும் தேர்தல் சீர்திருத்த செயன்முறைகள் மார்ச் மாதத்தையும் தாண்டி நீடிக்கக்கூடிய சாத்தியம் இருக்கிறது. மாகாண சபை தேர்தல்களை நடத்தவேண்டியிருந்த நேரத்தில் தேர்தல் சீர்திருத்தங்களை முன்னெடுத்த அரசாங்கத்தின் 2017 தந்திரோபாயத்தை ஒத்ததே இதுவாகும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வாக அமைக்கப்பட்ட மாகாண சபைகள் கடந்த நான்கு வருடங்களாக செயலிழந்து கிடக்கின்றன. அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு மக்கள் பிரதிநிதிகளினால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையில் மாகாணங்கள் - அதிகாரங்கள் கடுமையாக மத்தியமயப்படுத்தப்பட்டு- ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஆளுநர்களின் நிர்வாகங்களின் கீழ் இருக்கின்றன. மாகாணசபை தேர்தல்கள் ஒத்திவைப்பு அதிகாரப்பரவலாக்கலை கேலிக்கூத்தாக்குகிறது. மத்திய அரசாங்கத்தின் முகவர்களாக செயற்படும் ஆளுநர்களின் நிருவாகம் மாகாணங்களின் மக்களின் விருப்பங்களுக்கு வழக்கம் மீறிய ஒன்றாக இருக்கிறது.

**மாறுகின்ற முன்னுரிமைகள்**

பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு வரிகள் அதிகரிப்பு, அரசாங்க செலவினங்கள் குறைப்பு, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெறுதல் என்பவற்றையும் விட வேறு பல நடவடிக்கைகளை வேண்டிநிற்கிறது. தங்களது பங்கேற்றினால் நிலைவரங்களில் மேம்பாட்டை ஏற்படுத்த முடியும் என்று மக்கள் உணரக்கூடிய ஆட்சிமுறையொன்று அதற்கு தேவை. மாகாணங்களின் மக்களினால் தெரிவுசெய்யப்பட்டு மக்களுக்கு பொறுப்புக்கூறக்கூடிய - அதிகாரங்கள் பரவலாக்கப்பட்ட கட்டமைப்புக்களை உருவாக்குவதே மாகாண சபைகள் உருவாக்கப்பட்டதன் நோக்கமாகும்.

மாகாண சபைகளுக்கு போதுமான வளங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு உகந்த முறையில் அவை செயற்பட அனுமதிக்கப்பட்டிருந்தால், தற்போதுள்ளதைப் போன்று இல்லாமல், பொருளாதார நெருக்கடியை இலங்கையினால் சிறப்பாக தாக்குப்பிடித்திருக்கக்கூடியதாக இருந்திருக்கும். மாகாணசபைகளுடன் ஒப்புரவான முறையில் தேசிய பட்ஜெட்டை பகிர்ந்துகொள்வதற்கு பதிலாக மத்திய அரசாங்கம் மிகப்பாரிய பங்கை தனக்கு ஒதுக்கியது. அதிகாரப்பரவலாக்கத்தை உறுதிசெய்வது நாடு இன்று எதிர் நோக்கியிருக்கின்ற பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்கு தேவையான முறைமை மாற்றத்தின் ஒரு அங்கமாகும்.

இத்தகைய பின்புலத்தில் அரசாங்கம் தங்களுக்கு எதையும் செய்யவில்லை என்று உணரும் மட்டக்களப்பு சிவில் சமூக தலைவர்கள் தங்களது வருமானத்தையும் நுகர்வையும் அதிகரிக்க வீட்டுத் தோட்டச் செய்கை மற்றும் சுயதொழில் வாய்ப்பு திட்டங்கள் தொடர்பில் மக்களுக்கு அறிவூட்டுவது குறித்து பேசினார்கள். ஆனால் நவீன யுகத்தின் வாய்ப்புக்களை அனுகூலமாகப் பயன்படுத்துவதற்கு தேவையான தொழில்வாய்ப்பு மற்றும் சம்பாத்தியங்களுக்கு வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கையினால் பெரியளவுக்கு உதவமுடியாது.

மட்டக்களப்பில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது அரசாங்கத்தின் பட்ஜெட் யோசனைகள் குறித்து கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. சமுதாயத்தின் அடிமட்டங்களில் உள்ள மக்களின் பிரச்சினைகளை அரசாங்கம் புரிந்துகொண்டதாக பட்ஜெட் யோசனைகள் அமையவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனால், புதிய கொள்கைகளில் ஒன்று குறித்து கலந்துரையாடலில் திருப்தி வெளிப்படுத்தப்பட்டது. பட்ஜெட் யோசனை இல.13 பின்வருமாறு கூறுகிறது. 'அரசாங்க நிலங்களை பாராதீனப்படுத்தும் பூர்வாங்க நடவடிக்கைகள் பிரதேச செயலாளர்களின் ஊடாக பிரதேச செயலகங்களினால் முன்னெடுக்கப்பட்ட போதிலும் பின்னர் ஒரு கட்டத்தில் அத்தகைய கடமைகள் விசேட தேவைகளுக்கென்று நிறுவப்பட்ட இலங்கை மகாவலி அதிகார சபைக்கும் நிலச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கும் கூட ஒதுக்கப்பட்டன. நிலங்களை பராதீனப்படுத்துவதுடன் தொடர்புடைய பூர்வாங்க நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் வெவ்வேறு வழிகளில் கையாளப்பட்டதால் பாரபட்சமும் முறைகேடுகளும்இடம்பெற்றதாக கூறப்பட்டது.

'எனவே மேற்கூறப்பட்ட விசேட தேவைகள் ஏற்கெனவே நிறைவு செய்யப்பட்டதால், மகாவலி அதிகாரசபை மற்றும் நிலச்சீர்திருத்த ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற நிலங்களில் பராதீனப்படுத்தல் உட்பட சகல அரசாங்க நிலங்களின் பராதீனப்படுத்தலுடன் தொடர்புடைய பூர்வாங்க நடவடிக்கைகள் பிரதேச செயலாளர்களினால் மாத்திரம் முன்னெடுக்கப்படுவதற்கு வசதியாக அடுத்தவருடம் செயற்திட்டம் ஒன்று தயாரிக்கப்படும்."



முன்னர் மகாவலி அதிகாரசபை பொறுப்பில் இருந்தபோது நாட்டில் உள்ள பெரும்பாலான நிலங்களின் பயன்பாட்டுடன் தொடர்புடைய தீர்மானங்கள் கொழும்பில் இருந்தே மேற்கொள்ளப்பட்டன. நிலங்கள் பராதீனப்படுத்தலுடன் தொடர்புடைய தீர்மானங்கள் பிரதேச மட்டத்துக்கு பன்முகப்படுத்தப்படுவது நிலப்பயன்பாடு தொடர்பில் சமூக மட்டத்தில் மக்கள் தங்கள் அபிப்பிராயத்தை தெரிவிப்பதற்கான வாய்ப்பைக் கொடுக்கும். அதிகாரப்பரவலாக்கல் உணர்வுடன் முன்னெடுக்கப்படும் இந்த நடவடிக்கை ஊழலையும் முறைகேடாக வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படுவதையும் குறைக்க உதவமுடியும் என்பதுடன் பொறுப்புக்கூறலை மேம்படுத்தி தேசிய பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான பொது முயற்சிகளில் தங்களுக்கு உரிமையிருக்கிறது என்ற உணர்வை சகல மக்களுக்கும் கொடுக்கும்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**36)** பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

**37)** நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

**38)** தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

**39)** கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


**40)** இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

**41)** அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

**42)** பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

**43)** கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

**44)** எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

**45)** 


படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

**46)** நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

**47)** மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

**48)** சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

**49)** எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

**50)** காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

**51)** பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

**52)** தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

**53)** மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

**54)** சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

**55)** பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

**56)** காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

**57)** கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஓரிகாமி 3) அலப்பறை

**58)** உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

**59)** குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

**(30 புள்ளிகள்)**

**60)** பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **36.** | 3 | **37.** | 1 | **38.** | 1 |
| **39.** | 2 | **40.** | 3 | **41.** | 3 |
| **42.** | 1 | **43.** | 3 | **44.** | 3 |
| **45.** | 2 | **46.** | 3 | **47.** | 2 |
| **48.** | 2 | **49.** | 3 | **50.** | 2 |
| **51.** | 3 | **52.** | 3 | **53.** | 3 |
| **54.** | 3 | **55.** | 2 | **56.** | 3 |
| **57.** | 2 | **58.** | 2 | **59.** | 3 |
| **60.** | பொருத்தமான வாக்கியங்கள் | | | | |

## கல்வி tv CHANNEL-1

**24.11.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

**24.11.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# உதவி கல்விப் பணிப்பாளர் தயாளனுக்கு வரவேற்பு!



அம்பாறை, நவ. 24

திருக்கோவில் கல்வி வலயத்தில் இருந்து இடமாற்றம் பெற்று சம்மாந்துறை வலயத்திற்கு வந்திருக்கும் உதவி கல்விப் பணிப்பாளர் பூ.பரம தயாளனுக்கு, கோரக்கர் தமிழ் மகாவித்தியாலயத்தில் வரவேற்பு விழா நடைபெற்றது.

திருக்கோவில் வலயத்தில் ஐந்து வருடங்கள் கடமையாற்றிய இலங்கைக் கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த பரமதயாளன் வீரமுனையைச் சேர்ந்தவர்.

கோரக்கர் தமிழ் மகா வித்தியாலய அதிபர் பி. இளங்கோ தலைமையில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் ஊர் சார்பில் கோரக்கர் ஆலய தலைவர் வி. மோகன் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டார்கள்.

ஆரம்பக்கல்வித்துறையில் தேர்ச்சி பெற்ற பரமதயாளன் சம்மாந்துறை வலயத்தில் ஆரம்பக் கல்வித்துறை அபிவிருத்தியிலும், நாவிதன்வெளிக் கோட்ட கல்வி அபிவிருத்தியிலும் பங்காற்றவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது. (அ)

# நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளரின் முன்மாதிரி

நிந்தவூர், நவ. 24

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த நாவிதன்வெளி பிரதேச சபைத் தவிசாளர் அ.ஆனந்த, மாணவர் கல்வி அபிவிருத்திக்கான செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்.

வறுமைக்கோட்டில் வாழும் மக்களைக் கொண்ட தமது பிரதேசங்களின் பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு தவிசாளர் ஆனந்த இந்த செயல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்.

குறிப்பாக தமது சொந்த நிதி மூலம் கல்வி அபிவிருத்திக்கான இத்தகைய செயற்திட்டங்களை தவிசாளர் ஆனந்த முன்னெடுத்து வருவதை யிட்டு பொது மக்கள் பெரும் வரவேற்பும், நன்றியும் தெரிவித்துள்ளனர்.

தவிசாளர் ஆனந்தவின் இத்தகைய முன்மாதிரி செயற்திட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவது குறித்து நாவிதன்வெளி பிரதேச கல்வி சார் அமைப்புக்கள் பலவும் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சம்மாந்துறை கல்வி வலயத்திலுள்ள கமு-சது-றாணமடு இந்துக்கல்லூரி மாணவர்களின் நலன் கருதி, பாடசாலை நூலகத்திற்கு தனது சொந்த நிதியிலிருந்து ஐம்பதாயிரம் ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதி வாய்ந்த நூல்களை தவிசாளர் ஆனந்த அன்பளிப்பு செய்துள்ளார்.

கல்லூரி அதிபர் க.கதிரைநாதனிடம் கல்லூரி வளாகத்தில் வைத்து தவிசாளர் இந்த நூல்களைக் கையளித்தார். (அ-06)

# குளிர்காயும்போது தீப்பற்றி வயோதிபப் பெண் மரணம்!

மட்டக்களப்பு, நவ. 24

கடும் குளிர் காரணமாக தீ மூட்டி குளிர்காய்ந்து கொண்டிருந்த வயோதிபப் பெண்ணொருவர் தீப்பரவி உயிரிழந்துள்ள சம்பவமொன்று நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

சித்தாண்டி பகுதியைச் சேர்ந்த 78 வயதுடைய வயோதிபப் பெண்ணொருவர் சட்டி ஒன்றில் தேங்காய் மட்டைகளை கொண்டு தீ மூட்டி குளிர்காய்ந்து கொண்டிருந்தபோது அப் பெண்ணின் உடலில் தீ பரவியுள்ளது.

இவ்வாறு தீ காயங்களுக்குள்ளான பெண் வாழைச்சேனை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே மரணமடைந்தார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சந்திவெளி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# மருதமுனை பிரதான நகரத்தை இணைக்கும் வீதி புனரமைப்பு



கல்முனை, நவ. 24

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட மருதமுனை பிரதான நகரத்தை இணைக்கின்ற நவியான் குளப்பகுதியை ஊடறுத்து செல்கின்ற வீதி தற்போது துரிதமாக புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.

நீண்ட காலமாக புனரமைப்பு செய்யப்படாத இந்த வீதியினால் அப்பகுதியில் வாழும் சுமார் 80 குடும்பங்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டிருந்தன.

இந்நிலையில் நேற்று முன் தினம் அதன் முதற்கட்டப் பணிகள் நிறைவுறும் நிலையில் காணப்படுகிறது. மக்களும் இலகுவாக தங்களது போக்குவரத்துக்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வீதியின் புனரமைப்பு வேலைத்திட்டங்களை அப்பகுதியில் வசிக்கின்ற பெண்கள் சிலர் சுயாதீனமாக இணைந்து ஒரு அமைப்பு ஒன்றை உருவாக்கி வீதியின் புனரமைப்பிற்காக அப்பகுதி தனவந்தர்கள், வர்த்தக நிலையங்களிடம் நிதி சேகரித்து இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். (அ)

# உள்நாட்டுத் துப்பாக்கிகளுடன் வாகரை பகுதியில் ஐவர் கைது!

மட்டக்களப்பு, நவ. 24

வாகரை பிரதேசத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகளுடன் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாகரை பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் 25 முதல் 50 வயதுடைய வாகரை கதிரவெளி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக வாகரை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது. (அ)

# பகவான் சத்ய சாயி பாபாவின் ஜனனதின விழா காரைதீவில்



அம்பாறை,நவ. 24

காரைதீவு சத்யசாயி நிலையத்தின் ஏற்பாட்டில் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 97வது ஜனன தின விழா நேற்று புதன்கிழமை நிலையத் தலைவர் எம்.இராஜேஸ்வரன் தலைமையில் வெகு விமர்சையாக இடம்பெற்றது.

ஜனன தின விழாவை முன்னிட்டு நேற்று அதிகாலை 04.45 மணிமுதல் ஓங்காரம், சுப்ரபாதம், நவரத்தினமாலை என்பன பாடப்பட்டு காலை 7 மணியளவில் தேரோடும் வீதி வழியாக ஊர்வலம் இடம்பெற்றது.

வீதி ஊர்வலத்தில் சாயி பக்தைகளான திருமதி பராபரம் துளசி ரஞ்சன், திருமதி புவனேஸ்வரி ஜெயகணேஷ், செல்வி முகூர்த்தனா ரவீந்திரன் ஆகியோர் நகர சங்கீர்த்தன பஜனை பாடினர்.

ஊர்வலம் முடிவில் பிரசாந்திக் கொடியேற்றல் நிகழ்வு இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து ஓம்காரம், பஜனை, சிறப்புப் பேச்சு, சாயி பாலர் பாடசாலை மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்தல் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன. (அ)

# மட்டக்களப்பு-திருகோணமலை பிரதான வீதியின் அவல நிலை!



மட்டக்களப்பு, நவ. 24

மட்டக்களப்பு - திருகோணமலை பிரதான வீதியின் அவலநிலை இது.

தற்போது மழைக்காலம் வாகரை பிரதான வீதி நீர் நிறைந்த குண்டும் குழியுமாக காட்சி தருகிறது.

கிழக்கு மாகாணத் தலைநகர் திருமலைக்கு மட்டக்களப்பிலிருந்து இலகுவாகச் செல்லும் ஒரே பாதை இதுதான்.

அவசரமாக செல்வதாக இருந்தால் இப்பாதையால் பயணிக்கத்தான் முடியாது. அதிகாரிகள் பலரும் செல்கின்ற இப்பாதையை பார்த்துக் கொண்டுதானே செல்கின்றனர்.

இதனைப் புனரமைக்குமாறு பல தடவைகள் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு விட்டன. ஆயினும் இன்னும் விமோசனம் கிடைக்கவில்லை. (அ)

# ஒவ்வொரு 11 நிமிடத்துக்கும் ஒரு பெண் கொல்லப்படுகிறார்

## ஐ.நா. பொதுச் செயலர் அதிர்ச்சித் தகவல்

நியூயோர்க், நவ. 24

'உலகில் ஒவ்வொரு 11 நிமிடத்துக்கும் ஒரு பெண் அல்லது சிறுமி அவருடைய காதலன் அல்லது குடும்ப உறுப்பினர்களால் கொல்லப்படுகிறார்' என ஐ.நா. பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்டெரெஸ் கவலை தெரிவித்தார்.

பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் நாளை வெள்ளிக்கிழமை கடைப்பிடிக்கப்பட உள்ள நிலையிலும், டில்லியில் ஷ்ரத்தா வாக்கர் என்ற இளம் பெண் காதலன் ஆப்தாப் அமீன் என்பவரால் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள சூழலிலும் இந்த கருத்தை அவர் தெரிவித்தார்.

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையை எடுக்கவேண்டிய நேரமிது. இதுபோன்ற வன்முறைகளை வரலாற்று புத்தகங்களில் ஏற்ற வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறை என்பது உலகின் மிகப் பரவலான மனித உரிமை மீறலாக மாறியுள்ளது. ஒவ்வொரு 11 நிமிடத்துக்கும் ஒரு பெண் அல்லது சிறுமி அவருடைய காதலன் அல்லது குடும்ப உறுப்பினர்களால் கொலை செய்யப்படுகிறார். கொரோனா பாதிப்பு முதல் பொருளாதார சரிவு வரையிலான தாக்கங்கள், தவிர்க்கமுடியாத வன்முறைகளையும், வாக்குவாதங்களையும் அதிகரிக்க வழிவகுத்துள்ளது.



இதில் பெண்கள் மற்றும் சிறுமிகள் வெறுப்பு பேச்சு, பாலியல் ரீதியில் மற்றும் இணைய வழியில் என பல வகை துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றனர். பெண்களின் அடிப்படை உரிமைகள், சுதந்திரம், சமமான பொருளாதார மீட்சி, உலகின் தேவையான நீடித்த வளர்ச்சி ஆகியவற்றையும் இந்த வன்முறைகளும், பாகுபாடும் தடுக்கின்றன.

இந்த வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் சீர்திருத்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நேரமிது. அதாவது, பெண்கள், சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் அரசுகள் சிறந்த திட்டங்களை வடிவமைத்து, நிதி ஒதுக்கி, தேசிய அளவிலான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். இந்த நடவடிக்கைகளின் ஒவ்வொரு நிலைகளிலும் சமூக குழுக்கள் உள்ளிட்ட அடிநிலை அமைப்புகளையும் ஈடுபடுத்தவேண்டும் என்பதோடு சட்டம் நடைமுறைப்படுத்தப்படு வதையும் மதிக்கப்படுவதையும் உறுதிப்படுத்த வேண்டும். அப்போதுதான் பாதிக்கப்படுபவர்களுக்கு ஆதரவும் நீதிக்கான உரிமையும் காக்கப்படுகிறது என்ற உணர்வு ஏற்படும்.

பெண்கள் உரிமைகள் அமைப்புகள் மற்றும் இயக்கங்களுக்கான நிதியை 2026 ஆம் ஆண்டுக்குள் 50 சதவீதமாக அரசுகள் உயர்த்த வேண்டும். மேலும், பெண்களின் உரிமைகளுக்கான ஆதரவு குரலை நாம் அனைவரும் எழுப்ப வேண்டும். அனைவரும் பெண்ணியவாதிகள் என பெருமையுடன் அறிவிக்க வேண்டும். ஆணாதிக்கத்தை சவால்விடும் வகையிலான பொதுப் பிரசாரங்களை ஆதரித்து, பெண் வெறுப்பு மற்றும் வன்முறைகளை தடுக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

'ஒன்றிணைவோம்: பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை முடிவுக்கு கொண்டுவருவதற்கான செயற்பாடு' என்ற இந்த ஆண்டுக்கான சர்வதேச தின கருப்பொருளை குறிப்பிட்ட அன்ரனியோ குட்டெரெஸ், 'பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவாகவும் மாற்றத்துக்கு அழைப்பு விடுக்கும் உலகம் முழுவதும் உள்ள சமூகச் செயற்பாட்டாளர்களுக்கு துணை நிற்போம்' என்பதே அந்த கருப்பொருளின் அர்த்தம்' என அவர் மேலும் தெரிவித்தார். (அ)



# வரலாறு காணாத அளவுக்கு நியூயோர்க்கில் கடும் பனி!

நியூயோர்க், நவ. 24

அமெரிக்காவில் கடும் பனிப்பொழிவு காரணமாக நியூயோர்க் மாகாணத்தில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் பல்வேறு மாகாணங்களில் கடும் பனிப்பொழிவு நிலவி வருகிறது. குறிப்பாக நியூயோர்க் மாகாணத்தில் வரலாறு காணாத அளவுக்கு பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது.

மாகாணம் முழுவதும் பலத்த காற்றுடன் பனி கொட்டி வருகிறது. அங்குள்ள எரி நகரில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு 24 மணி நேரத்தில் 180 செ.மீ. பனிப்பொழிவு ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனால் சாலைகள், வீடுகள், வாகனங்கள் பனிப் போர்வை போர்த்தி காட்சியளிக்கின்றன. குளிர் வாட்டி வருவதால் மக்கள் வீடுகளுக்கு உள்ளேயே முடங்கியுள்ளர்.

இதனால் அவர்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. வீதிகளில் குவிந்துள்ள பனியை அப்புறப்படுத்தப்படும் பணிகள் நடந்து வருகின்றன.

இதனிடையே கடுமையான பனிப்பொழிவை எதிர்கொண்டுள்ள நியூயோர்க் மாகாணத்தில் ஜனாதிபதி ஜோ பைடன் அவசர நிலையை பிரகடனப் படுத்தியுள்ளார்.

அங்கு பனிப்பொழிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை துரிதப்படுத்த அவர் உத்தரவிட்டுள்ளார். (அ)

## நேபாள பாராளுமன்ற தேர்தல்:

# தொடர்ந்து 7ஆவது முறையாக வென்றார் ஷேர் பகதூர்



காத்மண்டு, நவ. 24

275 உறுப்பினர்களை கொண்ட நேபாள பாராளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை தேர்தல் நடந்தது. அதோடு 550 உறுப்பினர்களை கொண்ட 7 மாகாண சட்டசபைகளுக்கும் தேர்தல் இடம்பெற்றது.

இதில் பிரதமர் ஷேர் பகதூர் தூபா வெற்றி பெற்றார். ஷேர் பகதூர் தூபா தனது சொந்த தொகுதியான தன்குடாவில் தொடர்ந்து 7 ஆவது முறையாக வெற்றி பெற்றுள்ளார்

பாராளுமன்ற தேர்தலில் 60 சதவீத வாக்குகள் பதிவானதாக நேபாள தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. அதைத் தொடர்ந்து உடனடியாக வாக்குகளை எண்ணும் பணிகள் தொடங்கின. பாராளுமன்றத்துக்கான 275 உறுப்பினர்களில் 165 பேர் நேரடி வாக்கு மூலமாகவும், மீதமுள்ள 110 பேர் விகிதாசார அடிப்படையிலும் தேர்வு செய்யப்படுவார்கள்.

அதேபோல் மொத்தமுள்ள 550 சட்டசபை உறுப்பினர்களில் 330 பேர் நேரடியாகவும் 220 பேர் விகிதாசார முறையிலும் தேர்வு செய்யப்படுவார்கள். அதன்படி விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முடிவுகள் அடுத்த மாதம் 8 ஆம் திகதிக்குள் அறிவிக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

பாராளுமன்ற தேர்தலில் பிரதமர் ஷேர் பகதூர் தூபாவின் ஆளும் நேபாள காங்கிரஸ் தலைமையிலான ஜனநாயக மற்றும் இடதுசாரி கூட்டணிக்கும், முன்னாள் பிரதமர் கே.பி.சர்மா ஒலியின் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (யூ.எம்.எல்) தலைமையிலான இடதுசாரி மற்றும் இந்து சார்பு கூட்டணிக்கும் இடையே பலப்பரீட்சை நிலவுகிறது. இந்த நிலையில், பாராளுமன்ற தேர்தலில் பிரதமர் ஷேர் பகதூர் தூபா வெற்றி பெற்றார்.

ஷேர் பகதூர் தூபா தனது சொந்த தொகுதியான தன்குடாவில் தொடர்ந்து 7 ஆவது முறையாக வெற்றி பெற்றுள்ளார். 25 ஆயிரத்து 534 வாக்குகளை பெற்று முன்னிலையில் அவரை எதிர்த்து போட்டியிட்ட சாகர்தாகல் 13 ஆயிரத்து 42 வாக்குகளை மாத்திரம் பெற்று தோல்வி அடைந்தார். (அ)

# 10,000 ஊழியர்களை நீக்கும் கூகுள்!

நியூயோர்க்,நவ.24

ருவிட்டர் மற்றும் அமேசனைத் தொடர்ந்து கூகுள் நிறுவனமும் தனது நிறுவனத்தில் பணியாற்றும் சுமார் 10,000 ஊழியர்களை பணி நீக்கம் செய்ய உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பொருளாதார சூழல் காரணமாக செலவுகளைக் குறைப்பதற்காக உலகம் முழுவதும் பல்வேறு நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களை பணிநீக்கம் செய்து வருகின்றன. இதன்படி பிரபல சமூக வலைத்தள நிறுவனமான ருவிட்டர், மைக்ரோசொப்ட் நிறுவனமும் ஊழியர்களை பணிநீக்கம் செய்துள்ளது.

இவ்வாறு முக்கிய நிறுவனங்களில் 2022 ஆம் ஆண்டில் இதுவரை 1 இலட்சத்து 35 ஆயிரம் ஊழியர்கள் பல்வேறு தொழில்நுட்ப நிறுவனங்களில் இருந்து பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், கூகுள் நிறுவனம் தனது நிறுவனத்தில் பணியாற்றும் சுமார் 10,000 ஊழியர்களை பணிநீக்கம் செய்ய உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இருந்து நீக்கம் செய்யப்படுவார்கள் என கூகுள் நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

# துருக்கியில் நிலநடுக்கம்!



இஸ்தான்புல், நவ. 24

துருக்கியில் நேற்று 6.1 ரிச்டர் அளவிலான பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டது.

உள்ளூர் நேரப்படி நேற்று அதிகலை 4.08 மணியளவில் இஸ்தான்புல் நகரிலிருந்து 170 கிலோமீற்றர் தொலைவில் இப்பூகம்பம் ஏற்பட்டதாக அமெரிக்க பூகோளவியல் அளவையில் நிறுவகம் தெரிவித்தது. 10 கிலோமீற்றர் ஆழத்தில் இப்பூகம்பம் ஏற்பட்டுள்ளதாக வும் அந்த நிறுவகம் கூறியது.

உயிரிழப்புகள் ஏற்பட்டதாக தகவல் எதுவும் இல்லை எனவும், இதில் 22 பேர் வரை காயமடைந்துள்ளனர் எனவும் துருக்கியின் உள்துறை அமைச்சர் சுலைமான் சோய்லு தெரிவித்தார். (அ)

# கோட்டா அரசியலுக்கு வந்தமைக்கு புத்திஜீவிகளே முழு பொறுப்பாளிகள்!

## சபையில் கூறினார் நிமல் லான்ஸா

கொழும்பு, நவ. 25

**அரசியல் தெரியாத மற்றும் புரியாத கோட்டாபய ராஜ பக்ஷவை அரசிய லுக்கு கொண்டு வந்தமைக்கு புத்தி ஜீவிகள் பொறுப்புக்கூற வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்ஸா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

கோட்டாபய ராஜபக்ஷ வை நான் அரசியலுக்கு கொண்டு வரவில்லை. அவரை அரசியலுக்கு கொண்டு வரு மாறு நாட்டின் வேறு குரல்கள் எழுப்பட்டன.


புத்திஜீவிகள் எனக் கூறிக் கொள்வோர் கோட்டாபய வுக்கு தவறான ஆலோசனை களை வழங்கினர்

எழுப்பட்ட அந்த குரல் களுக்காகவே நான் அவரது வெற்றிக்காக பாடுபட்டேன்.

புத்திஜீவிகள் எனக் கூறிக் கொள்வோர் கோட்டாபயவை அரசியலுக்கு கொண்டு வந்து அவருக்கு தவறான ஆலோச னைகளை வழங்கினர் - என்றார்.

கோட்டாபய ராஜபக்ச அரசியலுக்கு வர வேண்டும் என்று பௌத்த பிக்குமார், சிங் கள தேசியவாதிகள் உட்பட புத்திஜீவிகள் கோரிக்கை விடுத்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழ்.பொது நூலகத்தை நேற்று பார்வையிட்டார் பாக். தூதுவர்



யாழ்ப்பாணம், நவ. 24

யாழ்ப்பாணத்திற்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண் டுள்ள இலங்கைக்கான பாகிஸ் தான் தூதுவர் மேஜர் ஜெனரல் உமர் பாரூக் புர்கி நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணம் பொது நூலகத்தைப் பார்வையிட்டார்.

அதன்போது, யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் இ.த. ஜெயசீலன் தூதுவரை வர வேற்றதோடு யாழ்ப்பாண பொது நூலகத்தின் சிறப்புகள் மற்றும் வரலாற்று ஆவணங் களைக் காண்பித்தார். (அ)

# டிப்ளோமா கற்கைக்கு விண்ணப்பம் கோரல்!

யாழ்ப்பாணம், நவ. 24

கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் நடத்தப் படும் டிப்ளோமா தரச்சான் றிதழ் கற்கை நெறிக்கு பயிலு நர்களை தெரிவு செய்வதற் கான விண்ணப்பம் கோரப் பட்டுள்ளது.

இந்தப் பயிற்சிநெறியைத் தொடர விரும்பும் யாழ்ப் பாண பிரதேச செயலர் பிரி வில் வசிக்கும் - க. பொ. த. சாதாரண தரம் படித்த 18 முதல் 35 வயதினர் எதிர்வரும் டிசெம்பர் 10ஆம் திகதிக்கு முன்னதாக யாழ்ப்பாண பிர தேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு முற்பதிவு செய்யு மாறு பிரதேச செயலர் அறி வித்துள்ளார். (ஐ)

# முத்து சிவலிங்கம் காலமானார்



கொழும்பு, நவ. 23

இலங்கைத் தொழிலாளர் காங்கிர ஸின் முன்னாள் தலைவரும், தொழிற் சங்கவாதியுமான முத்து சிவலிங்கம் காலமானார்.

79 வயதான அவர் கடந்த சில வருடங்களாக நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில், நேற்று காலை நுவரெலியா வில் அவரது இல்லத்தில் காலமானார் என இலங்கைத் தொழிலாளர் காங்கி ரஸ் அறிவித்துள்ளது.

மலையகத்தின் சிரேஷ்ட தொழிற்சங்கத் தலைவர்களில் ஒருவ ரான அவர், பிரதி அமைச்சராகவும் செயற்பட்டுள்ளார்.

இந்நிலையில், அவரது இறுதி நிகழ்வுகள் குறித்த தகவல்கள் பின்பு அறிவிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஈச்சங்குளம் துயிலும் இல்லம் அருகே உள்ள காணி துப்புரவு



வவுனியா, நவ. 24

வவுனியா ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இராணுவ முகாம் அமைக்கப் பட்டுள்ள நிலையில்- இரா ணுவ முகாமுக்கு அருகேயுள்ள காணியைத் துப்புரவு செய்யும் நடவடிக்கையில் பொதுமக் கள் ஈடுபட்டனர்.

2022 ஆம் ஆண்டுக்கான மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 27ஆம் திகதி இடம்பெற உள்ள நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்ன ணியின் பாராளுமன்ற உறுப் பினர் செ. கஜேந்திரனின் தலைமையில் இந்த சிரமதா னம் வேலைகள் மேற்கொள் ளப்பட்டன.

இதேவேளை, முற்பகல் 10. 30 மணியளவில் ஈச்சங்குளம் துயிலும் இல்லத்தை அண் மித்த வளாகத்தில் சுடரேற்றி அஞ்சலி செலுத்திய பின்னரே குறித்த சிரமதான செயற்பாடு கள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இளவாலையில் புத்தக அரங்க விழா நாளை முதல் 3 நாள்கள் நடைபெறும்

யாழ்ப்பாணம், நவ. 24

தேசிய கலை இலக்கியப் பேரவை, இள வாலை திருமறைக் கலா மன்றத்துடன் இணைந்து நடத்தும் புத்தக அரங்க விழா இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் நாளை வெள்ளிக் கிழமை மாலை 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தொனிப் பொருளில் பல்வேறு அமைப்புகளுடனும் இணைந்து தேசிய கலை இலக்கியப் பேரவையி னால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் ஆறாவது நிகழ் வாக இவ் இளவாலை புத்தக அரங்க விழா அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

நாளை வெள்ளி, மறுநாள்களான சனிக் கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெற வுள்ள இந் நிகழ்வில் நூல் அறிமுகக் கலந்துரை யாடல்கள், நாடக ஆற்றுகைகள் மற்றும் புத் தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் இடம் பெறவுள்ளன.

இவ் விழாவின் தொடக்க நிகழ்வாக ஈழத்து நூல்களை அறிவோம் என்ற தலைப்பிலான நூல் களின் அறிமுகமும் கலந்துரையாடலும் அமர்வு 01, அண்ணாவியார் தொமிங்கு இராசாத்தம்பி நினைவு அரங்கில் இளவாலை திருமறைக் கலா மன்றத்தின் இணைப்பாளர் செ.பீ.பியன்வெனு தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில் நூல் அறிமுக உரைகளை அழ. பகீரத னின் 'எப்படியெனிலும்' கவிதைத் தொகுதி பற்றி எழுத்தாளரும், கல்வியாளருமான ந.குக பரன் அவர்களும், சி.சிவசேகரத்தின் 'ஆச்சியின் கொண்டையூசிகள்' கவிதைத் தொகுதி தொடர் பாக யாழ். பல்கலைக்கழக சட்ட மாணவன் அ.அன்றூட்சனும், க.சிவகரனின் 'இரங்கி' சிறுகதைத் தொகுப்பு பற்றி கவிஞரும், ஓய்வு நிலை வங்கியாளருமான அழ.பகீரதனும், அல் வின் எட்வின் பீரிஸின் 'இலை மறை காய்கள்' கவிதைத் தொகுதி தொடர்பாக எழுத்தாளரும், அபிவிருத்தி உத்தியோகத்தருமான டயானா நியூட்டனும், ந.குகபரனின் 'நீரூறிய சொற்கள்' கவிதைத் தொகுப்பு தொடர்பாக ஆசிரியரும், பேச்சாளருமான பு.நகுலனும் ஆற்றவுள்ளனர்.

நிகழ்ச்சித்தொகுப்பினை இளவாலை திரு மறைக் கலா மன்ற இளையோர் இணைப்பாளர் ஏ.அனோஜனுடன், இளவாலை திருமறைக் கலா மன்ற ஊடக தொடர்பாளர் ஏ.நிதர்சன் இணைந்து மேற்காள்ளவுள்ளனர்.

அதைத் தொடர்ந்து மாலை 5 மணிக்கு செம் முகம் ஆற்றுகைக் குழுவினரின் 'எலியார் எங்கே போனார்?' 'கோமாளிகள்' ஆகியவற்றுடன் மறு மலர்ச்சி மன்ற சிறுவர்களின் 'முட்டைகள்' ஆகிய சிறுவர் நாடகங்களும் இசை, நடன நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ள னர். (அ)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்

துயர் .நெற்
THUYAR.NET

துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்

ஈழநாடு
Eelanadu

ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்

DAN news

டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்

விபரங்களுக்கு: thuyar.net Tel: 0094 752 225 225

# அரச அச்சக ஊழியர் பணிப் பகிஷ்கரிப்பு!

கொழும்பு, நவ. 24

அரச அச்சகத்தின் ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பை ஆரம்பித்துள்ளனர்.

மேலதிக கொடுப்பனவு வழங்கப்படுவதில் காணப்படும் சிக்கலை அடிப்படையாகக் கொண்டு இந்த பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

இந்த நெருக்கடி தொடர்பில் தமது ஊழியர்கள் பல மாதங்களாக கலந்துரையாடியபோதிலும் இது வரை தீர்வு கிட்டவில்லை என அச்சக தொழிற்சங்க ஒன்றியத்தின் பிரதிநிதி நுவான் புத்திக தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அரச அச்சகர் கங்கா கல்பனி லியனகேவிடம் வினவியபோது, ஊழியர்களின் கோரிக்கை தொடர்பில் ஊடக அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும், இந்தப் பிரச்னைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என அரச அச்சகர் கூறினார். (அ)

# முன்னாள் போராளிகளுக்கு எதிரான வழக்குகளை விரைவாக முடியுங்கள்!

## ஜனாதிபதி செயலகம் பணிப்புரை

கொழும்பு, நவ. 24

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மற்றும் தடுப்புக் காவலில் உள்ள விடுதலைப் புலிகள் அமைப்பின் சந்தேக நபர்களுக்கு எதிரான விசாரணைகளை துரிதமாக முடிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, வெளிவிவகார அமைச்சு மற்றும் நீதி அமைச்சுக்கு தேவையான நடவடிக்கைகளை விரைந்து முடிக்குமாறு ஜனாதிபதி செயலகம் பணிப்புரை விடுத்துள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் தொடர்பான விசாரணைகள் மற்றும் நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்படக்கூடிய நபர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வது, புனர்வாழ்வளிக்கப்பட வேண்டியவர்களுக்கு புனர்வாழ்வு வழங்குதல் அல்லது குற்றஞ்சாட்ட முடியாத வர்களை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில் கடந்த வாரம் நீதியமைச்சின் அதிகாரிகளுடன் இது தொடர்பில் கலந்துரையாடி இந்த தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளதாக அரசாங்கத்தின் தலைமை அதிகாரி சாகல ரத்நாயக்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் தெரிவித்தனர்.

குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்று தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி செயலகத்தின் பிரதானி சாகல ரத்நாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதன்படி, குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது அடுத்த ஆண்டுக்கு முன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (அ)

# மதுபானம் அருந்திக்கொண்டிருந்த 5 பாடசாலை மாணவர்கள் சிக்கினர்!

கொழும்பு, நவ. 23

பாணந்துறை கடற்கரையில் நேற்று முன் தினம் பிற்பகல் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது பாடசாலை மாணவர்கள் ஐவர் பாடசாலைச் சீருடையில் பியர் அருந்திய நிலையில் பிடிபட்டுள்ளதாக பாணந்துறை பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பாணந்துறையில் உள்ள பிரபல பாடசாலையொன்றின் 16 மற்றும் 15 வயதுடைய மாணவர்களைக் கொண்ட குழுவொன்றே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை கடற்கரையில் விசேட தேடுதல் நடவடிக்கையின்போது பாடசாலைச் சீருடையில் பியர் அருந்திக் கொண்டிருந்த குறித்த ஐந்து மாணவர்களும் பியர் கலன்களுடன் கைது செய்யப்பட்டதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பரீட்சை முடிவடைந்ததையடுத்து, பாணந்துறையிலுள்ள மதுபானக் கடையில் பியர் கொள்வனவு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களின் பெற்றோரை அழைத்து அறிவுரைகள் வழங்கி மாணவர்கள் ஒப்படைக்கப்படுவார்கள் என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# “பாடசாலைக்கு ஆசிரியைகள் சேலை மட்டுமே அணியலாம்!”

கொழும்பு, நவ. 23

பாடசாலை ஆசிரியைகள் சேலையை தவிர வேறு ஆடைகளை அணிந்து பாடசாலைகளுக்கு கடமைக்காக வர முடியாது என பொதுநிர்வாக அமைச்சு நேற்று சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க தெரிவித்தார்.

பல பாடசாலைகளில் பணிபுரியும் பெண் ஆசிரியைகள் புடைவைக்கு பதிலாக வேறு ஆடைகளை அணிந்து பாடசாலைகளுக்கு வருகை தந்துள்ளதாக தெரியவந்துள்ளதையடுத்து இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

ஆசிரியர்கள் கடமை நிமித்தம் பாடசாலைகளுக்கு வரும்போது புடைவை உடுத்தியே வரவேண்டும் எனவும், அதில் எந்த மாற்றமும் இல்லை எனவும் கல்வி அமைச்சு கொள்கை தீர்மானம் எடுத்துள்ளதாகவும் செயலாளர் குறிப்பிட்டார்.

அனைத்து அரச நிறுவனங்களிலும் பெண்கள் பொருத்தமான ஆடைகளை அணிந்து பணிக்கு வரலாம் என வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையை தன்னிச்சையாக மாற்றினால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்-

ஆசிரியத் தொழிலில் உள்ள அனைத்து பெண் ஆசிரியர்களும், விருப்பமுள்ள ஆசிரியைகளும் தங்கள் விருப்பத்திற்கேற்ப ஆடைகளை அணிந்து பாடசாலைகளுக்கு வர அனுமதிக்க வேண்டும் என்று சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. ஆண்கள் குழு ஒன்று கூடி பெண்களின் ஆடைகள் குறித்து முடிவெடுப்பது நகைச்சுவையான விடயம்-என்றார்.

பெண்கள் அரச அலுவலகங்களுக்கு பணிக்கு வரும்போது உரிய ஆடைகளை அணிந்து வரலாம் என சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ள போதிலும் அது பெண் ஆசிரியர்களுக்கு பொருந்தாது எனவும் கல்வி அமைச்சு இது தொடர்பில் உரிய நடவ டிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்னே தெரிவித்துள்ளார். (அ)

# வல்லை பாலத்தில் தவறிவிழுந்த இளைஞன் சடலமாக நேற்று மீட்பு!

யாழ்ப்பாணம், நவ. 24

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வல்லைப் பாலத்தில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இளைஞரொருவர் நீரேரியில் தவறி விழுந்து காணாமல்போயுள்ள நிலையில் நேற்று புதன்கிழமை காலை சடலமாக கண்டெடுக்கப்பட்டார்.

புத்தூர் கலைமதி கிராமத்தை சேர்ந்த பாஸ் கரன் திலக்ஸன் (வயது 19) எனும் இளைஞனே சடலமாக கண்டெடுக்கப்பட்டார்.

குறித்த இளைஞரும் அவரது நண்பர்கள் சிலரும் இணைந்து வல்லை பாலத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மாலை தூண்டில் போட்டு மீன்பிடியில் ஈடுபட்டனர்.

அதன்போது இளைஞன் பாலத்தில் இருந்து நீரேரிக்குள் தவறி விழுந்தார். இளைஞரைத் தேடும் பணியில் அச்சுவேலி பொலிஸாரும் பொதுமக்களும் இணைந்து



ஈடுபட்டனர்.

இந்நிலையில் நேற்று புதன்கிழமை கடற்படையினரின் சுழியோடிகளால் இளைஞன் சடலமாக கண்டெடுக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# 4000 தாதியர்களுக்கு 2023இல் சிங்கப்பூரில் வேலைவாய்ப்பு

சிங்கப்பூரில் அடுத்த வருடம் 4 ஆயிரம் இலங்கை தாதியர்கள் வேலைக்காக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் இதனைத் தெரிவித்தார்.

இதன்மூலம் 20 ஆண்டுகளுக்குப் பிறகு சிங்கப்பூர் சுகாதாரத் துறையில் பணியாற்றும் வாய்ப்பு இலங்கையர்களுக்கு கிடைத்துள்ளது.

இந்தநிலையில் இங்குள்ள அடிப்படைச் செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக சிங்கப்பூர் சுகாதார அமைச்சின் 10 அதிகாரிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக வைத்தியர் ஹேமந்த ஹேரத் குறிப்பிட்டார். (அ)

## ஆசிரியர்களின் ஆடை விடயம்

# கலந்துரையாடலின் பின்னரே ஒழுக்காற்று நடவடிக்கைகள்

கொழும்பு, நவ. 24

புடைவை அல்லாத சாதாரண ஆடைகளை அணிந்து பணிபுரியும் ஆசிரியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கல்வி அமைச்சு இறுதித் தீர்மானத்திற்கு வரவில்லை என கல்வி அமைச்சின் செயலாளர் எம்.என்.ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு எதிரான எதிர்கால நடவடிக்கை குறித்து மாகாண மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் கலந்துரையாடிய பின்னர் தீர்மானிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை,

பாடசாலை ஆசிரியைகள் சிலர், புடைவைக்கு பதிலாக வேறு ஆடைகளை அணிந்து பாடசாலைக்கு சமுகமளித்த சம்பவம் தொடர்பில் அறிக்கை கோரப்பட்டுள்ளது. கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

ஆசிரியர் பணியின் கண்ணியத்தை பாதுகாக்கும் வகையில், பாடசாலைக்கு வருகை தரும்போது, ஆசிரியர்கள் பாரம்பரியமாக பின்பற்றும் நடைமுறைகளை குறித்த ஆசிரியைகள் ஏன் கடைப்பிடிக்க தவறினார்கள் என்பது குறித்து விசாரணை நடத்தி வருவதாக அவர் கூறினார்.

இந்த விடயம் தொடர்பில் உடனடியாக அறிக்கையை வழங்குமாறு அந்தந்த பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் அதிகாரி தெரிவித்தார். மாணவர்கள் முன்னிலையில் ஆசிரியர் பணியின் கண்ணியத்தை காக்கவேண்டிய பொறுப்பு ஒவ்வொரு ஆசிரியருக்கும் உள்ளது எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். (அ)

## வரவு - செலவு...

அத்துடன், அரசாங்கத்தை மாற்றுவதற்காக இன்னுமொரு போராட்டம் நடத்த முயற்சித்தால் அதற்கு இடமளிக்க மாட்டேன். அடக்குவதற்கு இராணுவம் பயன்படுத்தப்படும். அவசரகால சட்டம் பிறப்பிக்கப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் நேற்று விசேட உரையாற்றினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், 1984ஆம் ஆண்டு முதல் இனப்பிரச்னை உள்ளிட்ட விடயங்களை அனைவரும் அறிவோம். புதிதாக பேசுவதற்கு ஒன்றும் இல்லை. இதற்கான தீர்வுகளையே தற்போது காண வேண்டும். அடுத்த வருடம் 75ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்படும் போதாவது இதற்கான தீர்வுகளை காணவேண்டும். இல்லையெனில், 2048ஆம் ஆண்டிலும் நாடு இப்படியே இருக்கும்.

நாம் தமிழ் மக்களுடனான நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும். இந்த விவகாரம் குறித்து அக்கறை செலுத்தும் சிங்கள மக்களுடனான நம்பிக்கையையும் கட்டியெழுப்ப வேண்டும். இறுதியாக முஸ்லிம் சமூகத்தின் பிரச்னைகள் குறித்தும் பேசியுள்ளோம். ஆதாரங்கள் இன்றி தடுத்துவைக்கப்பட்டுள்ள இளைஞர்களை விடுவிப்பது குறித்து பாதுகாப்பு சபையுடன் கலந்துரையாடியுள்ளோம்.

எமது நாட்டின் நிர்வாகத்தை டின் டீயமின் (வியட்நாம் முன்னாள் ஜனாதிபதி) ஆட்சிக்குக் கொண்டுசெல்ல விரும்பவில்லை. டின் டீயம்களுக்கும் அவர்களை சுற்றியுள்ளவர்களுக்கும் நான் வாய்ப்பளிக்கமாட்டேன். மீண்டும் போராட்டம் நடத்தப் போவதாக கூறுகிறார்கள். யாருக்கும் எங்கும் கூட்டங்களை நடத்த முடியும். ஜே.வி.பி கூட்டங்களை நடத்தியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கில் கூட்டங்களை நடத்தியது. பொலிஸ் நிலையத்துக்கு சென்று அனுமதி பெற்று கூட்டங்களை நடத்துங்கள். வீதிகளில் ஆர்ப்பாட்டங்கள் நடத்துங்கள். நான் ஹிட்லரைப் போன்ற சர்வாதிகாரி என்று கூச்சலிடுங்கள். அதில் எந்தப் பிரச்னையும் இல்லை. ஆனால், அனுமதியைப் பெற்று இவற்றை செய்யுங்கள். வீதியில் செல்லும் வாகனங்களுக்கு இடையூறு விளைவிக்காதீர்கள். வேறு ஒன்றையும் கேட்கவில்லை. ஆனால் நடந்ததைப் போல் இன்னுமொரு போராட்டத்தை நடத்த முடியும் என்று நினைக்க வேண்டாம். அனுமதியின்றி வீதியில் செல்ல முயற்சித்தால் அதனைத் தடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவித்துள்ளோம். ஒவ்வொரு சட்டத்தரணியும் நீதிமன்றத்துக்கு சென்று இதற்காக வாதிடுகின்றனர். அரசாங்கத்தை மாற்றுவதற்கு இன்னுமொரு போராட்டம் நடத்த முயற்சித்தால் நான் அதற்கு இடமளிக்கமாட்டேன். இராணுவம் பயன்படுத்தப்படும். அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்படும்.

தேர்தல் செலவுகளைக் குறைக்கும் சட்டதிருத்தம் கொண்டுவரப்படவுள்ளது. இன்னும் பல விடயங்கள் இருக்கின்றன. இந்தக் குழுக்களுக்கு இளைஞர் ஐவரை நியமிப்பதற்கான அளவுகோள்களை தீர்மானிக்குமாறு ஆளும், எதிர்க்கட்சியினரை கேட்டுக்கொள்கின்றேன். டிசெம்பர் மாதத்துக்குள் அந்தப் பெயர்களைத் தேர்ந்தெடுத்து ஜனவரி மாதத்தில் இதற்கான பணிகளைப் பூர்த்திசெய்ய வேண்டும். காரணம் மாற்றம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும். நான் பாராளுமன்றத்தைக் கலைக்கப் போவதில்லை. இந்நாட்டின் பொருளாதாரத்தில் மிகப் பெரிய பிரச்னை இருக்கிறது. இதனை தீர்த்துக்கொண்ட பின்னர் எதையும் செய்ய முடியும். நாட்டில் பெரும்பாலானவர்கள், அரசியல் கட்சிகளையும் தேர்தல்களையும் வெறுக்கின்றனர்.

இன்று ஐக்கிய மக்கள் சக்தியின் கட்சிக் கூட்டத்துக்கு சென்றாலும் பழைய முகங்களையே பார்க்க முடிகிறது. புதிய முகங்களைக் காண முடியவில்லை. இளைஞர்கள் இதில் மாற்றத்தை ஏற்படுத்தப் பார்க்கின்றனர். அந்த மாற்றத்தை செய்தபின்னர் தேர்தலை நடத்தலாம். அப்போது, தேவையானவர்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றலாம். அதுதான் தேர்தல் முறையில் மாற்றம் செய்ய வேண்டும் என்று நான் கூறுகிறேன். விருப்பு வாக்குமுறைமை இருக்கும் வரையில் இந்த நாட்டில் ஊழல் இருக்கும். ஓர் ஆசனத்தை வென்றெடுக்க எவ்வளவு செலவிடுகிறார்கள் என்று பாருங்கள். 25 - 50 மில்லியன் ரூபாய் செலவிடுகின்றனர்.

இன்று டொலர் 380 ரூபாய் வரை சென்றுள்ளது. தேர்தலை நடத்த முடியாத நிலை இருக்கிறது. இவை குறித்து சிந்திக்க வேண்டும். எனவேதான், இந்த முறைமையில் மாற்றம் செய்ய வேண்டும் என்று கூறுகிறேன். அந்தப் பணியை இணைந்து செய்வோம் என்று மீண்டும் எதிர்க்கட்சிக்கு அழைப்பு விடுக்கின்றேன். உங்கள் அனைவருடனும் பணியாற்ற எனக்கு முடியும். எந்தப் பிரச்னையும் இல்லை. இந்த வருட இறுதிக்கு முன்னர் பேசிக்கொள்வோம் - என்றார். (ஐ)

## பிணையில்...

கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், சிறீ தம்ம தேரரை பிணையில் விடுவிக்க சட்டமா அதிபர் அனுமதி வழங்கினார். இதையடுத்து நேற்று அவரை . 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரு சரீர பிணையில் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் பிணையில் விடுவித்தது.

விடுவிக்கப்பட்ட சிறீ தம்ம தேரரை கடந்த ஜூன் மாதம் கல்வி அமைச்சுக்கு அருகில் இடம்பெற்ற போராட்டத்தின் போது சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தார் என்ற மற்றொரு குற்றச்சாட்டில் நேற்றைய தினமே பொலிஸார் கைது செய்தனர்.

கைதான சிறீ தம்ம தேரர் நேற்றைய தினமே கடுவலை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் டிசெம்பர் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இதேசமயம், அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகேவுக்கு சட்டமா அதிபர் பிணை அனுமதி வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மாகாண...

களித்ததாலேயே தேர்தலை நடத்தமுடியாது போனது.

மாகாணங்களில் புதிய எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அது நடைபெறவில்லை. அதற்கு சில தடைகள் உள்ளன. துரதிர்ஷ்டவசமாக இது அவர்களின் சொந்த செயல். தேர்தலை தடுப்பதற்காக அவர்கள் அதை செய்தார்கள். அதன் விளைவே அது. 13ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அவர்களிடமுள்ள அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். மாகாண மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் செயல்பாடுகளை கையாள வேண்டும். எனவே 13ஐ நடைமுறைப்படுத்த வேண்டும். அதனை நடைமுறைப்படுத்த அரசாங்கம் ஆர்வமாக உள்ளது - என்றார். (ஐ)

## 13 பிளஸ்க்கு...

பிரச்னை தீர்வு குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றினார். இதன்போது, "நாட்டில் மாற்றத்தை கொண்டு வருவோம். அப்போது அனைவருக்கும் அதிகாரத்தை பெற்றுக்கொள்ள முடியும். ஒன்றிணைந்து இனப் பிரச்னைக்கு தீர்வு காண்போம். இனப் பிரச்னை உள்ளிட்ட பிரச்னைகளுக்கு தீர்வு காண நான் இணங்குகிறேன். லக்ஷ்மன் கிரியெல்ல நீங்கள் இணங்குகிறீர்களா? சுமந்திரன், மனோ கணேசன் நீங்கள் இணங்குகிறீர்களா? நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்", என்று ஜனாதிபதி கேட்டார்.

இதற்கு பதிலளித்த லக்ஷ்மன் கிரியெல்ல, "ஜனாதிபதி அவர்களே என்னுடைய பெயரை கூறினீர்கள். நான் எப்போதுமே அதிகாரப் பகிர்வை விரும்புகிறவன். 1930களில் டொனமூர் பிரபு இலங்கைக்கு வந்த போது மலையக நாட்டுப் பிரதானி நிலமேயின் பூட்டனார் நாட்டில் மூன்று மாகாணங்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்து பிராந்திய முறையொன்றை உருவாக்குவோம். அதனை தொடர்ந்து சோல்பரி பிரபு வந்தார். அவருக்கும் அதிகாரத்தை பகிருமாறு சிங்கள மக்கள் கூறினர். அந்த வகையில் நான் எந்த பக்கத்தில் இருந்தாலும் அதிகாரப்பகிர்வை விரும்புபவன்", என்றார்.

அவரின் பின்னர் பதிலளித்த மனோ கணேசன் எம். பி, "சரி", என்று பதிலளித்தார்.

தொடர்ந்து சுமந்திரன் எம். பி., "சகல கட்சி கூட்டத்துக்கு நீங்கள் அழைப்பு விடுக்கும் இந்தத் தறுவாயில், வரவு - செலவுத் திட்ட உரை நிறைவடைந்தமையை தொடர்ந்து டிசெம்பர் 31இற்கு பின்னர் ஒரு முடிவை எடுக்கலாம்", என்றார்.

இதற்கு, "சரி 8ஆம் திகதி வரவு - செலவு திட்டம் நிறைவுக்கு வருகின்றது. அப்போது பேசுவோம்", என்று கூறினார் ஜனாதிபதி.

அந்தச் சமயத்தில் மீண்டும எழுந்த எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, "ஒரு விடயத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன். கடந்த கோட்டாபய அரசாங்கம் புதிய அரசமைப்பை உருவாக்க வழக்கறிஞர் குழுவொன்றை ஸ்தாபித்தது. அப்போது அங்கு செல்லத் தயாராகவிருந்த சமயத்தில் 13ஆவது திருத்தத்தை பாதுகாப்பதற்கு எனில், இங்கு வரவேண்டாம் என்ற செய்தி எமக்கு வழங்கப்பட்டது. 13ஆவது திருத்தத்தை ஒழிக்க வேண்டும் என்று கூறினர்", என்றார்.

இதன்போது, குறுக்கிட்ட ஜனாதிபதி "நான் 13ஆவது திருத்தத்தை பாதுகாக்க போகிறேன்", என்றார்.

அவருக்குப் பதிலளித்த லக்ஷ்மன் கிரியெல்ல, "நீங்கள் தனிநபர். உங்களுக்கு மொட்டுக் கட்சியினரே ஆதரவு அளிக்கின்றனர். நான் மகிந்த ராஜபக்ஷவிடமும் கேட்கிறேன். அவர் 13 பிளஸ் என்று கூறியவர்", என்று தெரிவித்தார்.

அத்துடன், "இன்னமும்கூட நீங்கள் 13 பிளஸ்க்கு ஆதரவாக உள்ளீர்களா? அவ்வாறு உடன்பட்டால் சபைக்கு எழுந்து கூறுங்கள்", என்று கேட்டார்.

இதற்குப் பதிலளித்த முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ "ஆம்... நான் உடன்படுகிறேன்", என்றார்.

மீண்டும் சபையில் கருத்துரைத்த லக்ஷ்மன் கிரியெல்ல, "ஜனாதிபதி தனி ஒருவர் மொட்டுக் கட்சியினரின் நிலைப்பாடு என்ன என்பதை நாம் நன்கு அறிவோம். அதிகாரப் பகிர்வுக்கு அவர்கள் எதிரானவர்கள் பிரதமரிடம் கேளுங்கள். அவர் அனைத்து சந்தர்ப்பத்திலும் அதிகாரப் பகிர்வுக்கு எதிரானவர்..."

இதன்போது குறுக்கிட்ட அரச தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் கவிந்து குமாரதுங்க, "ஏன் சந்திரிகா கொண்டு வந்த பக்கேஜை (பிராந்திய அதிகாரப் பகிர்வு) நடைமுறைப்படுத்த முடியவில்லை. பிறகு கொண்டுவரப்பட்ட பிரேரணைகளை நடைமுறைப்படுத்த முடியவில்லை. ஐக்கிய இலங்கையில் இடம் பெறும் மாற்றம் என்றால் நாம் உடன்படுகின்றோம். மாறாக ஐக்கிய இலங்கைக்கு அப்பால்பட்ட திட்டமாயின் அதற்கு நாம் உடன்படமாட்டோம். அதற்கு பெரும்பான்மை மக்கள் இணங்கமாட்டார்கள். இங்கு பல்வேறுபட்ட கருத்துக்களை தெரிவிக்கலாம். ஆனால், யதார்த்தம் ஒன்று உள்ளது. எம்முடைய இராணுவத்தினர் ஐக்கிய இலங்கைக்காகத்தான் உயிரரை தியாகம் செய்தவர்கள்", என்றார்.

இதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு பின்னர் நாம் இது தொடர்பில் கூட்டத்தை கூட்டிப்பேசுவோம்", என்று கூறினார். (ஐ)

## பாகிஸ்தானின்...

தூதுவர் மேஜர் ஜெனரல் உமர் பாரூக் புர்கிக்கு அதிகளவான பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

இந்தப் பயணத்தின்போது, சக் கோட்டை இராணுவ முகாமுக்கு சென்ற அவர் அதன் அருகான பகுதிகளைப் பார்வையிட்டதுடன், பருத்தித்துறை முனை தொடர்பாகவும் கேட்டறிந்தார்.

இதேசமயம், இந்த வருடத்தின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த சீன தூதுவர் கீ சென்ஹொங்கும் பருத்தித்துறை முனையை பார்வையிட்டிருந்தார். அயல்நாடான இந்தியாவின் போட்டி நாடாக சீனா பார்க்கப்படும் நிலையில் இது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

## கூட்டமைப்பின்...

மைப்பு நேற்று முன்தினம் எடுத்திருந்தது.

21ஆவது திருத் தத்தின் மூலம் மீண்டும் நடைமுறைக்கு வந்துள்ள அரசமைப்பு பேர வையில், 10 உறுப்பினர்கள் அங்கம் வகிப்பர். சபாநாயகர் இதன் தலைவ ராக செயல்படுவார். பதவி வழியாக பிரதமர், எதிர்க்கட்சி தலைவர் அதன் நிரந்தர உறுப்பினர்களாக இருப்பர். ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சி தலைவர் ஆகியோர் தலா ஒரு பிரதிநிதியை பெயரிடுவர்.

பாராளுமன்றத்தில் இரண்டாவது பெரிய எதிர்க்கட்சி சார்பில் ஒருவரும், சிவில் சமூகத்தை சேர்ந்த மூவரும் அரசமைப்பு பேரவையில் அங்கம் வகிப்பர்.

இந்த வகையில், பாராளுமன்றத்தில் இரண்டாவது பெரிய எதிர்க்கட்சியான தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில், அரசமைப்பு பேரவைக்கான உறுப்பினராக த. சித்தார்த்தனை நியமிப்பதென தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்றகுழு ஏகமனதாக தீர்மானித்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பொலிஸ்...

கவனம் செலுத்தியுள்ளது.

தற்போதைய சமூகப் போக்குகளின் அடிப்படையில் புதிய சட்டமூலமொன்றை அறிமுகம் செய்ய வேண்டியதன் அவசியம் கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 1865ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பொலிஸ் கட்டளை சட்டத்திற்கு பதிலாக புதிய சட்டத்தை அறிமுகப்படுத்த பொது பாதுகாப்பு அமைச்சர் முன்வைத்த முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

## மன்செஸ்டர் யுனைற்றெட்டிலிருந்து றொனால்டோ வெளியேற்றப்பட்டார்

மன்செஸ்டர், நவ. 24

உதைபந்தாட்ட உலகின் நட்சத்திர வீரர்களில் ஒருவர் கிறிஸ்ரியானோ றொனால்டோ. 37 வயதான அவர் போர்த்துக்கல் நாட்டை சேர்ந்தவர். தற்போது மன்செஸ்டர் யுனைற்றெட் உதைபந்தாட்ட கழக அணிக்காக விளையாடி வருகிறார். கடந்த 2021இல் இரண்டு ஆண்டுகளுக்கு அவரை ஒப்பந்தம் செய்தது மன்செஸ்டர் யுனைற்றெட்.

ஆனால், நடப்பு சீசனில் மன்செஸ்டர் யுனைற்றெட் கழக அணிக்கான போட்டிகளில் றொனால்டோ ஆட வில்லை. அதற்கு பல்வேறு காரணங்கள் சொல்லப் பட்டு வந்தன. முக்கியமாக அந்த அணியின் பயிற்று விப்பாளர் இதற்கு காரணம் என சொல்லப்பட்டது.

அதுதொடர்பாக பேட்டியளித்த றொனால்டோ, தலைமை பயிற்றுவிப்பாளர் எரிக் டென் குறித்தும், அணியின் தனக்கு செய்யப்பட்ட துரோகம் மற்றும் ரூனி குறித்தும் வெளிப்படையாக இப்படி பேசினார். “அவர் ஏன் என்னை மிகவும் மோசமாக விமர்சிக்கிறார் என எனக்கு தெரியவில்லை. ஒருவேளை அவர் தனது விளையாட்டு வாழ்வை முடித்து விட்ட காரணத்தா லும், நான் இன்னும் களத்தில் விளையாடி வருவதும் கூட காரணமாக இருக்கலாம். நான் அவரை விட சிறந்தவன் என இங்கு சொல்லவில்லை” இவ்வாறு மனவருத்தத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

இந்தப் பேட்டிக்கு பிறகு றொனால்டோவை உட னடியாக மன்செஸ்டர் யுனைற்றெட் கழக அணியில் இருந்து வெளியேற்ற வேண்டும் என அணியின் மேலாளர் டெடி ஷெரிங்ஹாம் தெரிவித்தார்.

அதன்படி, தற்போது மன்செஸ்டர் யுனைற்றெட் கழக அணியில் இருந்து றொனால்டோ வெளியேறி யுள்ளார். இதனை அணி நிர்வாகம் உறுதிப்படுத்தியுள் ளது. பரஸ்பர ஒப்பந்தத்தின் மூலம் கிறிஸ்ரியானோ றொனால்டோ கழகத்தை விட்டு வெளியேறுவார் என்று மன்செஸ்டர் யுனைற்றெட் கழக அறிவித்துள்ளது.

கட்டாரில் நடந்து வரும் உலகக் கிண்ண உதைபந் தாட்டத் தொடரில் கானா அணிக்கு எதிரான போர்த் துக்கல்லின் தொடக்க ஆட்டத்துக்கு இரண்டு நாட் களுக்கு முன்னதாக றொனால்டோவின் மன்செஸ்டர் உடனான பயணம் முடிவுக்கு வந்துள்ளது குறிப்பிடத் தக்கது. (ஐ)



உலக கிண்ண உதைபந்தாட்டம்:

# ஜப்பான் ‘த்ரில்’ வெற்றி! ஸ்பெயின் கோல் மழை!!

டோஹா, நவ. 24

முன்னிலையில் இருந்த ஜேர்மனி அணியை இறுதி 15 நிமிடங்களில் அடித்த இரு கோல்கள் மூலம் த்ரில் வெற்றி பெற் றது ஜப்பான். மற்றைய போட்டியில் ஸ்பெயின் கோஸ்ர றிக்கா அணியை 7 - 0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.



உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி கட்டாரில் நடக்கிறது. இதில், நேற்றிரவு நடந்த போட்டி ஒன்றில் ஜேர்மனி - ஜப்பான் அணிகள் மோதின.

ஆரம்பத்தில் மெதுவாகவே ஆட்டம் நகர்ந்தது. 33ஆவது நிமிடத்தில் ஜேர் மனியின் இல்கே குவன்ரோகன் கோல் அடித்தார். ஆனாலும், முதல் பாதி ஆட் டம் தொடர்ந்தும் மெதுவாகவே நகர்ந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் சற்று விறுவிறுப்பானது. தொடர்ந்து ஜேர் மனிக்கு சவால் விடுக்கும் வகையில் ஜப் பான் வீரர்கள் ஆடினர். 75ஆவது நிமிடத்தில் ரிட்சு டோன், 83ஆவது நிமிடத்தில் அசானோ ஆகியோர் கோல் அடித்து ஜேர்மனிக்கு அதிர்ச்சி கொடுத்தனர்.

ஜேர்மனி கடுமையாக போராடியும் அந்த அணியால் கோல் அடிக்க முடியவில்லை. இறுதியில் 2 - 1 என்ற கோல் கணக்கில் ஜப்பான் வெற்றி பெற்றது.

மற்றைய போட்டியில் ஸ்பெயின் அணி கோல் மழை பொழிந்தது. அந்த அணியின் டானி ஒல்மோ (11ஆவது நிமிடம்), மார்கோ அசன்சியோ (21), பெரன் ரோரஸ் (31, 54), காவி (74), கார்லோஸ் சொலேர் (90), அல்வாரோ மொராடோ (90+2) ஆகியோர்கள் கோல் அடித்தனர்.

பதிலுக்கு கோஸ்ர றிக்கா அணியால் கோல் எதையும் அடிக்க முடியவில்லை. இறுதியில் 7 - 0 என்ற கோல் கணக்கில் ஸ்பெயின் வெற்றி பெற்றது. இந்த ஆண்டில் இதுவரை நடந்த போட்டிகளில் அதிக கோல்கள் அடிக்கப்பட்ட போட்டி இதுவாகும் என்ப தும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



## அதிர்ச்சி கொடுத்த ஆஸியை சமாளித்து வென்றது பிரான்ஸ்!

டோஹா, நவ. 24

நடப்பு சம்பியனான பிரான்ஸுக்கு அவுஸ்தி ரேலியா அணி அதிர்ச்சி கொடுத்தாலும் இறுதியில் 4 - 1 என்ற கணக்கில் பிரான்ஸ் வெற்றி பெற்றது.

உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடர் கட்டா ரில் நடக்கிறது. இதில் நேற்று நள்ளிரவு 12.30 மணிக்கு நடந்த போட்டியில் பிரான்ஸ் - அவுஸ்திரேலிய அணி கள் மோதின.

ஆட்டத்தின் தொடக்கத்திலேயே - 9ஆவது நிமிடத்தில் அவுஸ்திரேலியாவின் கிரெய்க் குட்வின் அபார கோல் அடித்து 1-0 என்று முன்னிலை பெற்று அதிர்ச்சி எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது.

எனினும், மெதுவான ஆட்டத்தை கையாண்ட பிரான்ஸ் அணிக்கு 27-வது நிமிடத்தில்தான் அட்ரி யன் ரேபியோ ஒரு கோலை அடித்து சமன் செய்தார். அடுத்த 5 நிமிடங்களில் அனுபவ வீரரும் நட்சத்திர வீரருமான ஒலிவர் ஜிரவ்த் சாதனை கோலை அடித்து முன்னிலை கொடுத்தார்.

இரண்டாவது பாதியிலும் கைலியன் எம்பாப்பே தன் ஆட்டத்திறனின் முழு உத்திகளையும் பயன்படுத்தி ஆடி 68ஆவது நிமிடத்தில் ஒரு கோலை அடிக்க, 71ஆவது நிமிடத்தில் ஜிரவ்த் இன்னொரு கோலை தலையால் முட்டி கோலுக்குள் செலுத்தினார். இந்த கோலுக்கு உதவி புரிந்தவரும் எம்பாப்பேதான். இறுதி யில், 4-1 என்று பிரான்ஸ் அபார வெற்றி பெற்றது. (ஐ)

## புதிய விடியல் உதைபந்து; றோயல், யூனியன் வெற்றி!

யாழ்ப்பாணம், நவ. 22

புதிய விடியல் உதைபந்தாட் டப் போட்டியில் நேற்று நடந்த போட்டிகளில் ஆனைக்கோட்டை யூனியன், ஊரெழு றோயல் அணி கள் வெற்றி பெற்றன.

டான் தொலைக்காட்சி குழுமம் நடத்தும் ‘புதிய விடியல்’ உதைபந் தாட்டப் தொடர் நடக்கிறது.

துரையப்பா பொது விளையாட்டரங்கில் நேற்று நடந்த போட்டிகளில், முதலாவது போட்டியில் ஆனைக்கோட்டை யூனியன் - காளியம்பாள் அணிகள் மோதின.

பரபரப்பான போட்டியில் இரு அணிகளும் சம பலத்துடன் பொருதின. 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் போட்டி தொடர்ந்த நிலையில், இறுதி நிமிடத்தில் ஆனைக்கோட்டை யூனியன் கோல் ஒன்றை அடித்தது. இதன் மூலம் ஆனைக்கோட்டை யூனியன் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

இரண்டாவது போட்டியில் வடமராட்சி இமையா ணன் கழகமும் - ஊரெழு றோயல் கழகமும் மோதின. சமபலம் பொருந்திய அணிகளின் மோதலாக இடம் பெற்ற இந்தப் போட்டியின் இறுதியில் 1 - 0 என்ற கோல் கணக்கில் ஊரெழு றோயல் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறின.

**இன்றைய போட்டிகள்**

இன்றைய தினம் துரையப்பா விளையாட்டரங்கில் நடக்கும் போட்டியில், 3.30 மணிக்கு சென். பிலிப்ஸ் அணியை பொலிகை ஒற்றுமை அணி எதிர்த்தாடுகிறது.

4.45 மணிக்கு நடக்கும் போட்டியில் உரும்பிராய் திருக்குமரனை எதிர்த்து உடுப்பிட்டி யூத் மோது கிறது. (ஐ)

## தேவை

பிரபல தனியார் நிறுவனம் ஒன்றின் விளம்பர பகுதியில் பணியாற்றுவதற்கு ஆட்கள் தேவை.
(பெண் பிள்ளைகள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு :
077 311 9298, 075 313 2805

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.11.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.